Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, OCTOBER 8, 2021

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 08, 2021 | ஒளி: 07 கதிர்:: 121 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE


டபிள்யூ.ஜே. பத்மினி


என்.டி. செனவிரத்ன


ஏ.ஆர். ஜயசுந்தர

# வரலாற்றை மாற்றிய மகளிர் பொலிஸ் பதவி உயர்வு

இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதன்முறையாக பெண் பொலிஸ் அதிகாரிகள் மூவர் ஒரே தடவையில், பிரதி பொலிஸ் அதிபர்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

---

விழிநிஜம் கரையோர விவகாரம்:

# முன்னாள் புலி உறுப்பினர் கைது

**போதைப்பொருள் கடத்தல், ஆயுதங்களில் பங்கெடுப்பு, புலிகளின் மீளுருவாக்கத்துக்கு உதவுதல் காரணமாம்**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை இந்தியாவின் தேசிய விசாரணை முகவரகம் நேற்று முன்தினம் (06) கைது செய்துள்ளது.

திருவனந்தபுரத்துக்கு அருகிலுள்ள விழிநிஜம் கரையோரத்தில் 300 கிலோ கிராம் ஹெரோய்ன், ஐந்து ஏ.கே-47 ரைபிள்கள், ஒன்பது மில்லிமீற்றர் 1,000 ரவைகள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான விசாரணையிலேயே 47 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



இன்றைய ஒரேயொரு தேவை ஒன்றிணைய வேண்டும்;

# பிரியக் கூடாது

நாடு இன்று முகம் கொடுத்துள்ள பாரிய இன்னல்களுக்கு நாட்டு மக்கள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமே தவிர பிரியக் கூடாது எனத் தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய, தமது அதிகாரங்களைத் தக்க வைப்பதற்காக முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகளுக்கு மக்கள் ஏமாந்து விட வேண்டாம் என்றார்.

தொடர்ச்சி P2




பாதீஸ்ரான்

2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் நவம்பர் 12ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும்.

அதற்கான நிதியொதுக்கீட்டு சட்டமூலம் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவால் பாராளுமன்றத்தில் நேற்று (08) சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு- செலவுத்திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 10ஆம் திகதி நடத்தப்படும்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (07) நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே மேற்கண்ட தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---



கல்லாறு கிராமத்தில்

# விசேட சுற்றிவளைப்பு

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு கிராமத்தில், நேற்று (07) காலை, சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கல்லாறு கிராமத்தில், தொடர்ச்சியாக குழுக்களுக்கு இடையிலான மோதல், வாள்வெட்டு சம்பவங்கள்,

தொடர்ச்சி P2

# தமிழ் எம்.பிக்கள் இருவர் பரஸ்பர கொலை குற்றச்சாட்டு

பாதீஸ்ரான்

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபனும் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர கொலைக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

தொடர்ச்சி P2

இந்திய இழுவை வலையை

# அனுமதிக்கவே முடியாது

**இந்திய வெளியுறவுச் செயலாளரிடம் அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு**

கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினையும் கடல் வளங்களையும் அழிக்கின்ற இந்தியக் கடற்றொழிலாளர்களின் இழுவை வலை (ரோலர்) தொழில் முறையை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்விடயத்தில் இந்தியாவின் தீர்க்கமான நடவடிக்கைகளை வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2






# புலமைப்பரிசில், உ/த பரீட்சைகள் மீண்டும் ஒத்திவைப்பு

**இணையம் ஊடாகவே சா/த மீளாய்வு விண்ணப்பம்**

2021 ஆம் ஆண்டு நடத்துவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரம், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகள் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



# கணவன், மனைவிக்கு எதிராக சஜித் அணியும் முறைப்பாடு

பிரபல தொழிலதிபரான திருக்குமார் நடேசன், அவரது மனைவியான முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் நேற்று (07) முறைப்பாடு செய்துள்ளது.

தொடர்ச்சி P2

# மலசலகூடம் திறந்தே உள்ளது

பாதீஸ்ரான்



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன், தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில் உள்ள மலசல கூடத்தைப் பயன்படுத்துவதற்கு அனுதிக்கப்படுவதில்லை என்கிற குற்றச்சாட்டை அரசாங்கம் முழுமையாக மறுத்தது.

தொடர்ச்சி P2

# 15 முதல் ரயில்கள் ஓடும்



நாடளாவிய ரீதியிலான ரயில் சேவைகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# போத்தலில் சிறுநீர் கழிக்கும் ரிஷாட்



முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியூதீன், மாலை 5 மணிக்குப் பின்னர், போத்தலில் சிறுநீர் கழிக்கவேண்டியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தின் கவனத்துக்கு நேற்று (07) கொண்டுவந்தது.

தொடர்ச்சி P2

# குருநகர் மீனவர்கள் மீன்பிடியை புறக்கணித்தனர்


**2,700 தொழிலாளிகள் பாதிப்பு**

செந்தூரன் பிரதீபன்

கற்கடதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இந்திய ரோலர் படகு மோதி

தொடர்ச்சி P2

# “அந்த ராஜபக்ஷ” சிக்கியிருந்தால் “இந்த ராஜபக்ஷர்கள்” குற்றவாளிகளா?



இன்று புலம்பெயர் சமூகத்தினரது பணம் பற்றி பேசப்படாது. பென்டோரா பேப்பர்ஸ் ஆவணம் பற்றி பேசப்படுகின்றது. அந்த ஆவணமும் புலம்பெயர் சமூகத்தினருக்கு ஏற்ற வகையில் தான் வெளிவந்துள்ளது என அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (7) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், முன்னாள் அமைச்சரான நிருபமா ராஜபக்ஷ இதில் சிக்கியுள்ளார் என்கிறார்கள். ராஜபக்ஷ என பெயரை வைத்திருப்பதால் விஜயதாச ராஜபக்ஷ

தொடர்ச்சி P2

முந்தல் திருமணத்தால்

# 100 பேர் தனிமை

பிரியங்கர

முந்தல், கொத்தன்தீவு பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களை மீறி, திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்ட மணமகன், மணமகள் உள்ளிட்ட 100 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என, முந்தல் வைத்திய சுகாதார பிரிவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களுள் 10 குழந்தைகளும் உள்ளடங்குவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொத்தன்தீவு வைத்தியசாலைக்கு அருகிலேயே இந்தத் திருமண நிகழ்வு ஏற்பாடு

தொடர்ச்சி P2



# 20 ஆயிரம் இடங்களில் மண்சரிவு அபாயம்

நாடளாவிய ரீதியில் மண்சரிவு அபாயம் மிக்க சுமார் 20 ஆயிரம் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவத்துள்ளது. குறித்த பகுதிகளிலுள்ள சுமார் 15 ஆயிரம் குடும்பங்களை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் தற்போது

தொடர்ச்சி P2

LK Newspaper Viber Community

## முன்னாள் புலி உறுப்பினர் கைது

புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உறுப்பினரான சபேசன் என்றழைக்கப்படும் சற்குணம், சென்னையில் வளரசவாக்கம் பகுதியில் கைது செய்யப்பட்டார் என அறிக்கை ஒன்றில் முகவரகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தல், ஆயுதங்களில் பங்கெடுப்பு, புலிகளின் மீளுருவாக்கத்துக்கு உதவுதல் ஆகியவற்றுக்காகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என முகவரகம் கூறியுள்ளது.

இந்தியாவிலுள்ள புலி ஆதரவாளர்களுக்கு இடையே சதித் திட்ட கூட்டங்களை சற்குணம் ஒழுங்குபடுத்தியதாகவும், இலங்கையிலுள்ள முன்னாள் போராளிகளை போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதற்கு முக்கிய பங்கு வகித்ததாக முகவரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பிரியக் கூடாது

தேசிய மக்கள் சக்தி( ம.வி.மு) தலைமையகத்தில் நேற்று (7) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

எமக்கு தெரியும் இந்த அரசாங்கம் மாத்திரமல்ல சுதந்திரத்துக்குப் பின்னர் ஆட்சியமைத்த சகல அரசாங்கங்களும் அவர்களின் அதிகாரத்துக்காக இனவாதத்தைப் பயன்படுத்தினர். அதேப்போல் அந்த இனவாதத்தை கடுமையாகப் பயன்படுத்திய அரசாங்கம் தான் இந்த நாட்டின் அதிகாரத்தை தற்போது கைப்பற்றியுள்ளது என்றார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் ஏற்பட்ட சமூக அமைதியின்மையை தமது அதிகாரத்துக்காக பயன்படுத்தியவர்களே இன்று அதிகாரத்தில் உள்ளனர்.

அவர்கள் எவ்வித வெட்கமும் தயக்கமுமின்றி இனவாதத்துக்காக முன்னின்றார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் அதனை ஊதிப் பெரிதுப்படுத்துவதற்காக பல நபர்களையும் குழுக்களையும் உருவாக்கினார்கள்.

பேராயர் கர்தினால் மாத்திரமல்ல. இந்த விடயம் தொடர்பில் தலையிடும் அனைவருக்கும் எதிராக மிகவும் கீழ்மட்டமான நிலையில், மீண்டும் இனவாதத்தை தூண்டுவதை அவதானிக்க முடிகிறது என்றார்.

சில காலம் அமைதியாக இருந்தவர்கள் தற்போது முன்னோக்கி வந்து தமது இனவாத ஆயுதத்தை கையில் எடுக்க ஆரம்பித்துள்ளனர்.

ஆனால் சமூக வலைத்தளங்களில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலோ அல்லது அரசாங்கம் தொடர்பிலோ விமர்சித்தால், சில பல நொடிகளிலேயே, குற்றப்புலனாய்வு பிரிவினர் நடவடிக்கை எடுக்கின்றனர். கைது செய்கின்றனர். சம்பந்தப்பட்டவர்களின் சமூக வலைத்தளங்களை முடக்கும் நிலையில், இனவாதத்தை தூண்டுபவர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட எவரும் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றார்.

## வரலாற்றை மாற்றிய மகளிர் பொலிஸ் பதவி உயர்வு

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகக் கடமையாற்றிவரும் பெண் பொலிஸ் அதிகாரிகள் மூவர் உடன் அமுலாகும் வகையில் பிரதி பொலிஸ்மா அதிபர்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகக் கடமையாற்றிய என். டி.செனவிரத்ன, ஏ.ஆர். ஜயசுந்தர, டபிள்யூ.ஜே.பத்மினி ஆகியோரே இவ்வாறு தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## 12/11 இல் பட்ஜெட்: 10/12 இல் வாக்கெடுப்பு

இதற்கமைய 2022 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு செலவினமாக பாதுகாப்பு அமைச்சுக்கு 37,304 கோடியே 58,60,000 ரூபாயும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 10,655 கோடியே 8,650,000 ரூபாயும் அரச பாதுகாப்பு அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கு 1,051 கோடியே 57,65,000 ரூபாயுமென மொத்தமாக 49,012கோடியே 2,75,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போன்று மாகாண, உள்ளூராட்சி சபைகள் அமைச்சுக்கு 32,910 கோடியே 80,00,000 ரூபாயும் நெடுஞ் சாலைகள் அமைச்சுக்கு 25,019 கோடியே 12,00,000 ரூபாயும் நிதி அமைச்சுக்கு 18,591 கோடியே 59,93,000 ரூபாயும் சுகாதார அமைச்சுக்கு 15,352 கோடியே 89,98,000 ரூபாயும் கல்வி அமைச்சுக்கு 12,760 கோடியே 50,00,000 ரூபாயும் போக்குவரத்து அமைச்சுக்கு 3,122 கோடியே 99,50,000 ரூபாயும் கமத்தொழில் அமைச்சுக்கு 2,431கோடியே 51,00,000 ரூபாயும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சுக்கு 1,430 கோடியே 49,65,000 ரூபாயும் மிகுதி ஏனைய அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதேவேளை விசேட செலவீனத்துக்காக 1,216 கோடியே 15,80,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஜனாதிபதியின் செலவீனத்துக்கு 278 கோடியே 88,00,000 ரூபாயும் பிரதமரின் செலவீனத்துக்கு 139 கோடியே 19,50,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## இந்திய இழுவை வலையை அனுமதிக்கவே முடியாது

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ச் ஸ்ரீ வர்தன் ஷ்ரிங்கலாவுடனான சந்திப்பின் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் இந்திய வெளியுறவுச் செயலாளருக்கு தெளிவுபடுத்திய கடற்றொழில் அமைச்சர்,

"இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய அத்துமீறிய சட்ட விரோத தொழில் முறை காரணமாக, 2015 ஆம் ஆண்டில் இருந்து இப்போது வரையான காலப் பகுதியில் வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு சொந்தமான சுமார் 500 மில்லியன் ரூபாய்க்கு அதிக பெறுமதியான தொழில் உபகரணங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அதனைவிட பல பில்லியன் ரூபாய் பெறுமதியான கடல் வளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எனவே இந்தச் சட்டவிரோத செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது என்றார்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட போது, இந்த விவகாரத்தினை தீர்ப்பதற்கான முன்வரைபு ஒன்றினை வழங்கியிருந்தேன் என்றும் எடுத்துரைத்தார்.

## தமிழ் எம்.பிக்கள் இருவர் பரஸ்பர கொலை குற்றச்சாட்டு

பாராளுமன்றத்தில் நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய செல்வராசா கஜேந்திரன் எம்.பி, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் வடக்கு, கிழக்கில் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முன்னிட்டு ஒரு இலட்ச ரூபாய் வழங்கப்பட்டிருந்தது. இதனைக் கொண்டு வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்தவர்கள் தற்போது நடு தெருவில் நிற்கிறார்கள்.

இவர்களுக்கு இதுவரையில் நியாயம் கிடைக்கவில்லை. எஞ்சிய தொகையும் இதுவரையில் வழங்கவில்லை. இதனால் பலர் தற்கொலை செய்துகொள்ளும் நிலைமையில் உள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்ட சிங்கள மக்களின் வீட்டுத் திட்டங்களை மாத்திரம் மீள 79.8 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இனவாத செயற்பாடு எனவும் தெரிவித்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன், சிங்கள மக்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் எங்கே? எப்போது ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த செல்வராசா கஜேந்திரன், நீர் போய் தேடிப்பாரும் என்றார்.

அங்கு கொலைகளை செய்துவிட்டு இங்கு (பாராளுமன்றத்தில்) பொய்களை பேச வேண்டாமென திலீபன் எம்.பி தெரிவித்ததைத் தொடர்ந்து. நீரும் பெரும் கொலைகளை செய்துள்ளாய் என கஜேந்திரனும் கூறினார்.

## குருநகர் மீனவர்கள் மீன்பிடியை புறக்கணித்தனர்

சேதப்படுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணம் - குருநகர் பகுதி மீனவர்கள், நேற்று (07), கடற்றொழில் நடவடிக்கையை புறக்கணித்துள்ளனர்.

இதனால், மீன்பிடி படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், மீனவர்கள் தங்களுடைய மீன்பிடித் தொழிலில் இருந்து விலகியுள்ளனர்.

கடற்படையினர் தங்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்க வேண்டும் என்றும் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய ரோலர் படகுகள் தடுத்து நிறுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

குருநகர் மீனவர்கள், தொழிலுக்கு செல்லாத காரணத்தால் 2,700க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## போத்தலில் சிறுநீர் கழிக்கும் ரிஷாட்

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ரிஷாட் பதியூதீன் எம்.பி, மாலை 5 மணிக்குப் பின்னர் மலசலக்கூடத்துக்குச் செல்லமுடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அதனால், அவர் போத்தலிலே சிறுநீர் கழிக்கின்றார். ஆகையால், பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதுகாப்பதற்கு வழிவகைகளைச் செய்யுமாறு சபாநாயகரிடம் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிநின்றார்.

அரசியல் ரீதியாக வழக்கு தொடர்ந்தால் இதுவே நடக்கும். பணிப்பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறி ரிஷாட்டின் மைத்துனரை கைது செய்து சிறையில் அடைத்தனர். ஆனால், அப்பெண் கன்னித்தன்மையுடன் இருக்கிறார் என வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றார்.

ரிஷாட் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் அனைத்தும் அரசியல் ரீதியாக தொடரப்பட்டவை என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, லக்ஷ்மன் கிரியெல்ல, இதுவரையிலும் சிறையில் அடைக்கப்படவில்லை. கடந்த அரசாங்கத்தில் கைது செய்யப்பட்டு நான் சிறையில் அடைக்கப்பட்டேன். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து எங்களது அரசாங்கம் சிறையில் அடைப்பதாக சர்வதேசத்துக்கு கிரியெல்ல செய்தி சொல்ல முயற்சிக்கிறார். அதனாலேயே முதலில் சிங்களத்திலும், பிறகு அதே விடயத்தை ஆங்கிலத்திலும் கூறுகிறார் என்றார்.

"கடந்தகாலங்களில் நாங்களும் சிறையில் அடைக்கப்பட்டோம். அப்போதும் மாலை 5 மணிக்குப் பின்னர், போத்தல்களிலே சிறுநீர் கழித்தோம்" என்றும் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ரிஷாட் பதியூதீன் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசில் உ/த பரீட்சைகள் மீண்டும் ஒத்திவைப்பு

இவ்விரு பரீட்சைகளும் நவம்பரில் நடத்துவதற்கு திகதி குறிக்கப்பட்டிருந்தது எனத் தெரிவித்த கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக அப்பரீட்சைகள் இரண்டும் ஒத்திவைக்கப்பட்டன. எவ்வாறாயினும், முன்னர் திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்த முடியாது, மீண்டும் ஒரு முறை ஒத்திவைக்க வேண்டுமெனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அவ்விரு பரீட்சைகளுக்கான திகதிகளும் பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று (07) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போது வெளியாகியிருக்கும் 2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தர பரீட்சைகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பத் திகதி ஒக்டோபர் 25ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

அந்த விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க முடியுமெனத் தெரிவித்துள்ள பரீட்சைகள் திணைக்களம், உத்தியோகபூர்வமான இணையத்தளமான doenets.lk மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

## விசேட சுற்றிவளைப்பு

சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அதனை கட்டுப்படுத்தும் வகையில், குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்டனர்

இந்தச் சுற்றிவளைப்பின் போது வாள் ஒன்று , கசிப்பு, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, ஆவணங்கள் இன்றிய நிலையில் காணப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள் என்பவற்றை பொலிஸார் மீட்டதுடன், சந்தேகத்தின் பேரில் 08 நபர்களையும் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## மலசலகூடம் திறந்தே உள்ளது

சிறைச்சாலையில் உள்ள மலசலக்கூடத்தை பயன்படுத்துவதற்கு ரிஷாட் பதியூதீனுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்றும், அந்த மலசலகூடம் மாலை 5 மணியிலிருந்து காலை 06 மணி வரையில் மூடிவிடுவதாகவும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பில், சிறைச்சாலையில் ஆணையாளரிடம் தொலைபேசி ஊடாக வினவினேன். ரிஷாட் எம்.பி மலசலகூடத்தை பயன்படுத்த எந்தவிதமான தடைகளும் இல்லையென அவர் தெரிவித்தார் என, அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவித்தார்.

உணவு தொடர்பில் கோரிக்கை விடுத்து, வீட்டில் இருந்து உணவுகளை பெற்றுக்கொள்ள முடியும். எனினும் கொரோனா வைரஸ் காரணமாக வெளியிலிருந்து உணவுகளை சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் கூறினார் என்றார்.

எவ்வாறாயினும் வீட்டு உணவுகளை ரிஷாட் விரும்பினால் எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன், போலியான தகவல்களை பாராளுமன்றத்தில் கூறி பாராளுமன்றத்தை தவறாக லக்ஷ்மன் கிரியெல்ல வழிநடத்த கூடாது. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் அவர் செயற்பட கூடாது எனவும் ஜோன்ஸ்டன் கூறினார்.

நாம் ஒருபோதும் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடப்போவதில்லை. உணவு, மலசல கூடம் தொடர்பில் ரிஷாட்டுக்கு பிரச்சினை இருந்தால் அதுத் தொடர்பில் நீதிமன்றில் முறையிடலாம். ஆனால் அவ்வாறு எந்தவிதமான முறைப்பாடுகளும் இதுவரையில் ரிஷாட்டின் சட்டத்தரணி முன்வைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

## முந்தல் திருமணத்தால் 100 பேர் தனிமை

செய்யப்பட்டிருந்த்தாகவும், இதில் கலந்துகொண்ட எவரும் எவ்வித சுகாதார வழிகாட்டல்களையும் பின்பற்றியிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திருமண நிகழ்வை சுகாதார பரிசோதகர்கள் சுற்றிவளைத்த போது, பலர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

கடந்த வாரமும் குறித்த பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களை மீறி பல திருமண நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த்தாகவும், அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

## 20 ஆயிரம் இடங்களில் மண்சரிவு அபாயம்

முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசியக் கட்டட ஆய்வு நிறுவகத்தின் மண்சரிவு ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர், கலாநிதி காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் தற்போது நிலவும் சீரற்ற வானிலையால், மலைப்பாங்கான பிரதேசங்களில் ஆங்காங்கே சிறுசிறு மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் தாழ்நில பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சீரற்ற வானிலை, இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

## "அந்த ராஜபக்ஷ" சிக்கியிருந்தால் "இந்த ராஜபக்ஷர்கள்" குற்றவாளிகளா?

தவறிழைத்தால் கூட அது பிரதமர் மஹிந்த மற்றும் ஜனாதிபதி கோட்டாபய குற்றவாளி என கூற முடியுமா என கேள்வி எழுப்பினார்.

எனவே உறவு முறையும் அரசியலும் அப்பாற்பட்டதாகும். அரசியலுக்காக அனைத்தையும் இழக்க முடியாது. மஹாராஜா குழுமத் தலைவர் மறைந்த கிளி மஹாராஜாவும் திருக்குமார் நடேசனும் உறவினர்கள் தான். அப்படியென்றால் அதனைப் பற்றியும்எதிர்க்கட்சிதலைவரோ மனுஷ நாணயக்காரவோ பேசலாம் தானே. ஆனால் அவர்களிடம் இருந்து இவர்கள் சம்பளம் பெறுவதால் அது பற்றி பேசமாட்டார்கள் என்றார்.

இதேவேளை ஆசிரியர்கள் மாணவர்களை பணயம் வைத்து பழிதீர்க்க வேண்டாம் என தெரிவித்துள்ள அமைச்சர் சி.பி.ரத்னாயக்க, கோரிக்கை முன்வைத்து போராட்டம் நடத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு அநீதியை இழைக்கின்றீர்கள் என்றார்.

## கணவன், மனைவிக்கு எதிராக சஜித் அணியும் முறைப்பாடு

பென்டோரா பத்திரிகை வெளிப்படுத்தியுள்ள ஆவணங்களில் அவ்விருவரின் பெயர்களும் வெளியாகியுள்ளன. அதனால், முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் அம்முறைப்பாட்டின் ஊடாக கோரியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர்,கையொப்பமிட்டே ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## 15 முதல் ரயில்கள் ஓடும்

இந்நிலையில், ரயில்வே சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு போக்குவரத்து அமைச்சில் அனுமதி கோரியுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

LK Newspapers Vibe Community

# பட்டமளிப்பு விழா...









யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில், நேற்று (07), நிகழ்நிலையில் நடைபெற்றது. இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இந்நிகழ்வில், சுமார் 1,700 பேரின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. (படப்பிடிப்பு: எம். றொசாந்த், எஸ். நிதர்ஷன்)

13 முழுமையாக அமல்படுத்தப்படுமா?

## "மஹிந்தவை விட இளையவன் நான்"

### லக்ஷமன் கிரியெல்ல பதில்

பா.நிரோஸ்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் திருகோணமலை எண்ணைக் குதங்களை இந்தியாவுக்கு வழங்கியுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில பாராளுமன்றில் கூறியுள்ளார். அவ்வாறெனின் 13ஆவது திருத்தச்சட்டமும் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படுமா என எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷமன் கிரியெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.



பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் உதய கம்மன்பில, பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு வயதாகிவிட்டது. அவரின் வயது தொடர்பில் நான் கவலையடைகிறேன். அதனால் அவர் எனது உரையை ஒழுங்காக செவிமெடுக்கவில்லை.

2003ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படியே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதன்படி, 100 எண்ணை குதங்களையும் கொடுக்கவில்லை. 15 எண்ணை குதங்களைதான் கொடுத்தோம் என்றார்..

கம்மன்பிலவுக்கு எப்போதும் எனது வயதுதான் தெரிகிறது என கூறிய லக்ஷமன் கிரியெல்ல, ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைவிட நான் இளையவன் எனவும் தெரிவித்தார்.

## இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் கோடியை ஒதுக்கியது அரசாங்கம்

பா.நிரோஸ்

2022ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் செலவீனமாக 250,534 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

அடுத்த வருடத்துக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று (07) சபையில் சமர்பித்தார்.

இதன்படி, 2022 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு செலவினங்களுக்காக 37,304 கோடி ரூபாயும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 10,655 கோடியே 86, 50,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோல மாகாண, உள்ளூராட்சி சபைகள் அமைச்சுக்கு 32,910 கோடி ரூபாயும், நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 25,019 கோடி ரூபாயும், 1,200,000 ரூபாயும் நிதி அமைச்சுக்கு 18,591 கோடியே 59,93,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விசேட செலவினத்துக்காக 1,216 கோடியே 15,80,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதியின் செலவினத்துக்கு 278 கோடியே 8,800,000 ரூபாயும் பிரதமரின் செலவினத்துக்கு 139 கோடியே 1950,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சமாதானம் திரும்பி இருந்தாலும்

## முஸ்லிம்கள் இன்னும் திரும்பவில்லை

பா.நிரோஸ்

யுத்தம் நிறைவடைந்து வடக்கில் சமாதானம் மீள திரும்பியிருந்தாலும், புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இதுவரையில் மீள குடியமர்த்தப்படவில்லை என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



தேருநர்களை பதிவு செய்தல் திருத்த சட்ட மூலம் மீதான நேற்றைய (07) பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், 13ஆவது திருத்தச் சட்டத்தை பலப்படுத்த இந்தியா வலியுறுத்தியுள்ளது. அவ்வாறு 13ஐ பலப்படுத்த வேண்டுமாக இருந்தால், மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும். மாகாண சபை தேர்தலை காலந்தாழ்த்தியமைக்குக் கடந்த அரசாங்கமே பொறுப்பு எனவும் தெரிவித்தார்.

இதேவேளை யுத்தம் நிறைவடைந்து நாட்டில் சமாதானம் திரும்பியிருந்தாலும், வடக்கு மாகாணத்திலிருந்து பலவந்தமாக புலிகளால் வெளியேற்றப்பட்ட இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் இதுவரையில் மீள குடியமர்த்தப்படவில்லை. இதற்குப் பல நடைமுறை சிக்கல் இருப்பதாகவும் தெரிவித்தார்.

திருகுமார் நடேசனின்

## கறுப்புப் பணத்தை வெள்ளையாக்க முயற்சி



பா.நிரோஸ்

ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே திருகுமார் நடேசனின் வங்கிக் கணக்குக் வெளிநாடுகளில் இருந்து 31 இலட்ச மில்லியன் டொலர்கள் வந்துள்ளதாக தெரிவித்த ஐ.ம.சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.மரிக்கார், இந்தக் கறுப்புப் பணங்களை வெள்ளையாக்குவதற்கே ராஜபக்ஷர்கள் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்துள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

நேற்றைய (07) பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பென்டோரா பத்திரிகைகளில் வெளிப்படுத்தப்பட்ட பாரிய ஊழல் மோசடிகள், சொத்துப் பதுக்கல்கள் தொடர்பில் இலங்கையர்களான முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவர் திருக்குமார் நடேஷன் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் 1994ஆம் ஆண்டு முன்னரானது எனவும், ராஜபக்ஷர்களின் ஆட்சியில் இவர்கள் சொத்துகளை சேர்க்கவில்லை எனக் கூறுவதற்கு அரசாங்கம் பாரிய முயற்சிகளை மேற்கொள்கிறது.

திருக்குமார் நடேசன், 1995ஆம் ஆண்டு வரையில் பிரபல நிறுவனம் ஒன்றின் ஊழியராகவே இருந்தார். அதுபோல, 1994ஆம் ஆண்டே நிருபமா ராஜபக்ஷவை திருமணம் செய்தார். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் திருகுமார் நடேசன் கைது செய்யப்பட்ட, திருகுமார் நடேசனின் இலங்கை வங்கிக் கணக்குக் 31 இலட்ச மில்லியன் ரூபாய் பணம் வந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

## ரிஷாட் என்கிற இரும்பை வீசி பயனில்லை



பா.நிரோஸ்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்கிற இடி வரும்போதெல்லாம் ரிஷாட் பதியூதீன் என்கிற இரும்பை வெளியில் வீசி சரிவாராது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என்கிற இடி வரும்போது எல்லாம், ரிஷாட் என்கிற இரும்பை அரசாங்கம் வெளியில் வீசுகிறது. அவ்வாறு செய்வதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் குற்றவாளி என்றால் அவரை கைது செய்யுங்கள். அவருக்கு தண்டனை வழங்குங்கள். ரிஷாட்டை நிரபராதியாக்க நாம் ஒருபோதும் முயற்சிக்க மாட்டோம். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார்? அவரை அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான

## அதிகாரங்களில் பாதியை பறித்துவிட்டனர்

### இன விகிதாசாரத்தை அழிக்கவும் தீவிரம்

பா.நிரோஸ்

13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் 50 சதவீதமானவை பறிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கூட்டமைப்பு எம்.பி சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இன விகிதாரசாரத்தை மாற்ற அரசாங்கம் தீவிரமாக செயற்படுகிறது எனவும் குற்றம்சுமத்தினார்.

தேருநர்களை பதிவு செய்தல் திருத்த சட்ட மூலம் மீதான நேற்றைய (07) பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க இச்சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது என்றார்.



வடக்கு மாகாணத்துடன் தொடர்பில்லாத சில கிராமசேவகர் பிரிவுகளை வடக்குடன் இணைக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இது வடக்கின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முயற்சி எனவும் சாடினார்.

## இ.தொ.கா இனியும் தவறு செய்யாது

பா.நிரோஸ்

ஏனைய தொழிற்சங்க அங்கத்தவர்களையும் சமமாகப் பார்த்ததே இ.தொ.கா செய்த தவறு எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சரும் அக்கட்சியின் பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான், அந்தத் தவறை இனியும் இ.தொ.கா செய்யாது. எமது தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.



மலையகத்தில் பாற்பண்ணைகள் அமைக்கப்படுவதால், பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் எனவும் தெரிவித்த ஜீவன், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 580 ஏக்கர் காணிகள் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை எவரும் மறுக்க முடியுமா? எனவும் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். அரச பெருந்தோட்டக் காணிகள் தனியாருக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை எல்லாம் இராஜாங்க அமைச்சரான நான் கண்டுக்கொள்வதில்லை; மௌனமாக இருக்கிறேன் என பல்வேறு குற்றச்சாட்டுகள் எனக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக 180 நாள்கள் வேலை செய்யும் தொழிலாளர்களைகூட பதிவு செய்ய நிர்வாகங்கள் மறுக்கின்றன. இதுபோன்ற கம்பனிகளின் தவறுகளை நாம் தட்டிக்கேட்டுக்கொண்டு இருக்கிறோம். கூட்டு ஒப்பந்தம் இல்லை. ஆனாலும் இ.தொ.காவின் தொழிற்சங்க நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

கூட்டு ஒப்பந்தம் அவசியமான ஒன்று என நாம் கூறிவந்தோம். கூட்டு ஒப்பந்தம் ஒரு மரண சாசனம் என எதிர்க்கட்சியினர் விமர்சித்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் மௌனமாக இருக்கிறார்கள். இ.தொ.கா செய்த தவறு என்னவென்றால் அனைத்து தொழிற்சங்க அங்கத்தவர்களையும் சமமாகப் பார்த்தது தான். இனி அந்ததத் தவறு இருக்காது. மாற்று தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கு உள்ள பிரச்சினைகளை அந்தத் தொழிற்சங்க காரியாலயங்களிலேயே தெரிவிக்க வேண்டும்.

அரச பெருந்தோட்ட யாக்கம் (ஜே.ஈ.டி.பி) காணிகளை தனியார் துறைக்கு வழங்கி பாற் பண்ணைகளை அமைக்கப்போவதாக அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கம கூறியுள்ளார். இதில் இ.தொ.கா மௌனமாக இருப்பதாக கூறினார்கள். ஆனால் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம். அங்குள்ள 1,424 குடும்பங்களையும் பாதுகாக்கவும், அவர்களுக்கு தேவையானதை செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பாற்பண்ணையால் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கும். இங்குள்ள மக்களை பாதுகாப்பது இ.தொ.காவின் பொறுப்பு எனவும் தெரிவித்தார்.


சைல்ட் எக்ஸன் லங்கா வழங்கும் மொபைல் ஆப்

CAL Me



ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் அவசர எண்களை டயல் செய்ய முடியும்

GET IT ON Google Play

www.childactionlanka.org | www.childactionlanka.charity

ஊடக அனுசரணை லங்காதீப Sunday Times தமிழ்Mirror


LK Newspapers Viber Community

13 ஐ அமுல்படுத்த மாகாண சபை

# தேர்தலை நடத்தவும்

■ கே.எல்.ரி.யுதாஜித்



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் உடடியாக நடத்த வேண்டும் என்று முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா மன்றத்தின் தலைவருமான இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டதற்குப் பிற்பாடு கடந்த ஒரு மாதத்துக்குள் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியான இராஜதந்திர அழுத்தத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

"குறிப்பாக மனித உரிமை ஆணைக்குழுவினுடைய அழுத்தங்கள், இலங்கை அரசாங்கத்தின் சிறுபான்மை மக்கள் தொடர்பான செயல்வடிவங்களை முன்நகர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

"அதே நேரத்தில், வெளிநாடுகள் சம்பந்தமான இராஜதந்திரச் செயற்பாட்டில் தோல்வியைச் சந்தித்திருக்கிறது. 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டில் உள்ளமையை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியிருக்கிறது. புலம்பெயர் சக்திகளுடன் ஜனாதிபதி பேசப்போவதாகக் கூறியிருக்கிறார்.

"இவ்வாறான விடயங்களை வைத்துப்பார்க்கும் போது இலங்கை அரசு சம்பந்தப்பட்ட விடயத்தில் சில மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

"இலங்கை அரசின் இந்த மாற்றங்கள், அவதானிப்புகள் ஊடாக சிறுபான்மைத் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களிலும், சிறுபான்மை மக்கள் யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட விடயத்திலும் ஜனநாயக ரீதியான செயற்பாட்டிலும் மாற்றங்களைக் கொண்டுவந்து சிறுபான்மையினரினரை வெல்லவேண்டும்.

"அத்தோடு, மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்துவதற்கு வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் பிரதிநிதிகளும், அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்புகளை நல்கி, மாகாண சபையின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்று தெரிவித்தார்.

29ஆவது ஆண்டு

## தேசிய பாடசாலை தின விழா



■ நூருள் ஹுதா உமர்

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு, 29ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கல்லூரி அதிபர் ஏ.பி. முஜின் தலைமையில், தேசிய பாடசாலை தின விழா, கல்லூரியின் அதாஉல்லா கேட்போர் மண்டபத்தில் நேற்று முன்தினம் (06) கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாஉல்லா- கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளராக பல வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஏ.எல்.எம். காசிம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் 2020ம் ஆண்டு, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் விசேட பெறுபேறு பெற்ற மாணவர்களும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தொழில்நுட்பக் கல்லூரியில்

## புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்




■ வசந்தி . எம் எஸ் எம் நூர்தீன்

மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியில் இம்மாதம் 15ஆம் திகதி NVQ 3,4 மட்ட 6 மாத கால புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேற்படி தொழில் நுட்பக்கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இக்கற்கை நெறிகளுக்கு க.பொ.த சாதாரணதரம் கற்று சித்தியடையாத மாணவர்களும், க.பொ.த உயர்தரம் கற்ற மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விவசாய கள உதவியாளர், நீர்க்குளாய் பொருத்துனர், அலுமினிய வடிவமைப்பு, மோட்டார் சைக்கள் மற்றும் ஸ்கூட்டர் பழுதுபார்த்தல் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மாதாந்தம் 4,000 ரூபாய் நிபுணதா சிசு சவிய புலமைப்பரிசில் உதவித்தொகை வழங்கப்படவுள்ளதோடு, மானிய அடிப்படையிலான போக்குவரத்து சீசன் டிக்கட் வசதி, சுயதொழில் தொடங்குவதற்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது.

மேலும், இக்கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்கள் தொடர்ச்சியாக NVQ மட்டம் 5 கற்கை நெறிகளை கற்க முடியும். விண்ணப்ப படிவங்களை தொழில்நுட்ப கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

## கிழக்கில் 423 தமிழ் மொழி பாடசாலைகள் திறக்கின்றன

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாணத்தில், தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புகளைக் கொண்ட 200 மாணவர்களுக்குட்பட்ட 588 பாடசாலைகள் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என். பிள்ளைநாயகம், நேற்று (07) தெரிவித்தார்.

இதன்படி, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 423 தமிழ் மொழி மூல பாடசாலைகளும் 165 சிங்கள மொழி மூல பாடசாலைகளையும் எதிர்வரும் 21 ஆம் திகதி திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய, பாடசாலைகளை திறப்பதற்கு முன்னர் தொற்று நீக்கம் செய்யப்படவுள்ளதோடு, பாடசாலை வளாகம் முழுமையாக துப்புரவு செய்யப்பட்ட பின்னர், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளின் மேற்பார்வையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாகாண தடையை மீறிய

## பஸ்கள் சுற்றிவளைப்பு

■ பாறுக் ஷிஹான்



பயணத்தடையை மீறி மாகாணங்களுக்கு இடையில் சட்டவிரோதமாக சேவையில் ஈடுபட்ட அதி சொகுசு பஸ்கள் இரண்டு, இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு, பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இரு பஸ்களும் அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, கல்முனை ஊடாக கொழும்பு நோக்கி சென்று கொண்டிருப்பதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, பெரியநீலாவணை இராணுவ காவலரனில் வைத்து நேற்று முன்தினம் (6) இரவு 10 மணியளவில் தடுத்து நிறுத்தப்பட்டன.

இரு பஸ்களிலும் சுமார் 100க்கும் அதிகமான பயணிகள் இருந்ததுடன், அவ்விடத்துக்கு வருகை தந்த கல்முனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சாந்த விஜயகோன், சுகாதார தரப்பு அதிகாரிகளால் பயணிகள் அனைவரும் அறிவுறுத்தபட்டு, மீண்டும் அதே பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டு, கல்முனை பொலிஸ் நிலையத்தில் சிறுது நேரம் தடுத்து வைக்கப்பட்டு, எச்சரிக்கப்பட்ட பின்னர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மேலும், பஸ்களின் சாரதி மற்றும் நடத்துநர்களிடம் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன்

# பாடசாலைகள் இயங்கும்

■ கெ. கீதாஞ்சன், சுப்பிரமணியம் பாஸ்கரன்



நாடளாவிய ரீதியில் முன்பள்ளிகள் மற்றும் 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கப்பட்டு, கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதனடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளை ஆரம்பித்தல் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடலானது, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தலைமையில், பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில், நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

இதன்போது, பின்வரும் சுகாதார நடைமுறைகளை பேணியவாறு, பாடசாலை கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென, முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதற்கமைய, ஆசிரியர்கள் அனைவரும் தடுப்பூசி போட்டிருக்க வேண்டும்.

நீண்டகாலமாக பாடசாலைகள் திறக்கப்படாதிந்ததால் முன்னாயத்தமாக சிரமதான பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது டெங்கு பரவும் காலநிலை ஆரம்பித்திருப்பதால், டெங்கு பெருகும் இடங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பாடசாலைக்கு உள்வரும் பிரதான நுழைவாயில் மற்றும் வகுப்பறைகளில் தொற்று நீக்கும் திரவங்கள் சரிவர பயன்படுத்தப்பட வேண்டும்.

சிறுபிள்ளைகள் பாடசாலைக்கு வருவதால், சுகாதார நடைமுறைகளை அவர்களுக்கு வீடியோ ஊடாக காட்டுவதனால், அவர்களை சரிவர செயற்படுத்த முடியும்.

சமூக இடைவெளிகள் கட்டாயமாக பேணப்பட வேண்டும்.

கழிவகற்றல் செயற்பாடுகள் குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக மாணவர்கள் பயன்படுத்திய முகக்கவசங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

கொரோனா தொற்றினால் ஏற்படுகின்ற அறிகுறிகள் குறித்து ஆசிரியர்கள் அதிக அவதானத்தை செலுத்துவது நல்லது. குறிப்பாக, மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள அறிகுறிகள் அவர்களது குடும்பத்தில் யாருக்காவது ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து அறிவது சிறந்தது.

இதனைவிட, சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார பரிசோதகர் ஆகியோரிடம் தொடர்பில் இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் வாகனங்கள் மூலம் பிள்ளைகளை கொண்டு வரும்போது, அங்கு ஏற்படக்கூடிய சமூக இடைவெளிகள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.


மாணவர்கள் உணவருந்தும் இடங்களில், அதிக சமூக இடைவெளிகள் பேணப்பட வேண்டும்.

கிணறுகள் நீண்டகாலமாக பயன்படாதிருப்பதனால், குளோரின் இட்டு, அவற்றை தூய்மைப்படுத்துவது சிறந்ததாகும்.

அத்துடன், இந்த நடைமுறைகளை பாடசாலைகளில் பின்பற்ற செய்வதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அதிக அவதானம் செலுத்தப்பட்டு, முடிவுகள் எடுக்கப்பட்டன.

வீட்டில்

## வாள் வைத்திருந்தவர் கைது



■ எஸ். நிதர்ஷன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை, சுழிபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து, நேற்று முன்தினம் (06), பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வாள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, வாளை கையிருப்பில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 25 வயது இளைஞன் ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப்படையால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட் நபர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை, வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்க்கொண்டு வருகின்றனர். அண்மையில் பொன்னாலையில் பிறிதொரு பகுதியிலும் இவ்வாறு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வாள் ஒன்று மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## வீட்டு மதிலில் மோதி வாகனம் விபத்து



■ க. அகரன்

வவுனியா - ஈரப்பெரியகுளம் பகுதியில், நேற்று முன்தினம் (06) மாலை, டாட்டா ரக வாகனம் ஒன்று, வீடொன்றின் மதிலில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், வாகன சாரதி காயமடைந்துள்ளதுடன் வாகனம் பலத்த சேதமடைந்ததுள்ளதாகத் தெரிவித்த ஈரப்பெரியகுளம் பொலிஸார், வீட்டு மதிலும் உடைந்துள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த குறித்த டாட்டா ரக வாகனம், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல், மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

நொச்சிமுனையில்

## 162 கிலோ மஞ்சள் மீட்பு



■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி - முழங்காவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிமுனை பகுதியில், 162 கிலோகிராம் மஞ்சள், நேற்று முன்தினம் (06) மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, நொச்சிமுனை கடற்கரையில் இருந்து நான்கு சாக்கு மூடைகளில் கொண்டு செல்வதற்கு தயார் நிலையில் இருந்த போதே, இந்த மஞ்சள் தொகை மீட்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில், நொச்சிமுனையை சேர்ந்த 39 வயதான ஒருவரையும் அன்புரத்தைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் ஒருவரையும், பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லை இரத்த வங்கியில்

## 'இரத்த கையிருப்பு தீர்ந்து போகும் அபாயம்'

■ கெ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியில், இரத்த கையிருப்பு தீர்ந்து போகின்ற அபாய கட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் தெரிவித்தார்.

வெளிச்சம் அமைப்பினரின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு - மாஞ்சோலை வைத்தியசாலையில், நேற்று முன்தினம் (06) நடைபெற்ற மாபெரும் இரத்ததான முகாமில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியில் உள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், அப்பகுதி இளைஞர்கள் இரத்த தானம் செய்துள்ளனர்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழ்நிலையில், இரத்ததானம் வழங்குவது தொடர்பில் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு அல்லது அச்ச நிலை காணப்படுகின்றது என்றார்.

இது முற்றிலும் தவறான அச்சநிலை எனத் தெரிவித்த அவர், ஒருவர் இரத்தத்தை தானமாக வழங்கினால், அது புதிய இரத்த உற்பத்திக்கு வழிவகுக்கும் எனவும் கூறினார்.

இரத்தம் வழங்குவது உடல் ரீதியாகவோ அல்லது மருத்துவ ரீதியாகவோ தீங்கற்ற செயற்பாடு என்பதனை இளைய சமூகம் புரிந்து கொண்டு, இளைஞர்கள் இரத்த தானம் வழங்க முன்வரவேண்டும் எனவும், லோகேஸ்வரன் தெரிவித்தார்.



கிராம உத்தியோகத்தரின் கொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து

# பதுளையில் அமைதிவழி போராட்டம்



பாலித ஆரியவன்ஸ

அம்பன்பொல தெற்கு கிராம உத்தியோகத்தர் கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று (7) நாட்டின் பல இடங்களிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய, பதுளை மாவட்டத்தின் 570 கிராம உத்தியோத்தர் பிரிவுகளையும் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களால் பதுளை மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்கள் முன்பாக நேற்று (7) அமைதிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிராம உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறும், குறித்த கிராம உத்தியோகத்தரைக் கொலை செய்தவர்களுக்கு அதிகபட்ச தண்டனையைப் பெற்றுக்கொடுக்குமாறும் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் வெள்ளைக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

தோட்ட நிர்வாகத்தால் வஞ்சிக்கப்படும்

# தெல்வலவுக்கு நியாயம் வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

அஜித்லால் சாந்தஉதய

களுவத்த பெருந்தோட்ட நிறுவனத்துக்குரிய எந்தானை தோட்டத்தின் தெல்வல பிரிவில் வசிக்கும் தொழிலாளர்கள், தமது குடியிருப்புகளுக்கு பின்னால் உள்ள தோட்டத்துக்குச் சொந்தமான காணிகளில் முன்னெடுத்த மரக்கறி உற்பத்திகளை தோட்ட நிர்வாகம் அழித்துள்ளமை கவலைக்குரிய விடயம் என, நிவித்திகல பிரதேச சபையின் உறுப்பினர் எம்.எம். சமிந்த குமார தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறும் அவர், சப்ரகமுவ மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

200 குடும்பங்கள் 30 லயக்குடியிருப்புகளில் வசித்து வருவதுடன், கொரோனாவால் வருமானங்களை இழந்த குறித்த மக்கள், அன்றாட உணவு வேளைக்காக, தமது குடியிருப்புகளுக்கு பின்புறமாகவுள்ள இடங்களில் வாழை, பாக்கு உள்ளிட்ட உற்பத்திகளை மேற்கொண்டு வந்ததாகவும் நிவித்திகல பிரதேச சபையின் உறுப்பினர் எம்.எம். சமிந்த குமாரவின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





மேலும் இந்த மக்கள் 60 வருடங்களுக்கு மேலாக தமக்கு தேவையானவற்றை உற்பத்தி செய்து வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் நிவித்தகலை பொலிஸ் நிலையத்தில் 7 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் தோட்ட நிர்வாகத்தால் இரண்டு தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, கொரோனா தொற்றுக்கு மத்தியில் வாழ்வாதாரத்துக்காக பாரிய போராட்டங்களை எதிர்நோக்கி வரும் எந்தானை தோட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுத் தருமாறும் நிவித்திகல பிரதேச சபையின் உறுப்பினர் எம்.எம். சமிந்த குமார கடிதம் மூலம் சப்ரகமுவ மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



மக்களுக்கு அச்சுறுத்தலான குளவிக் கூடுகளை

# அப்புறப்படுத்துமாறு கோரிக்கை

இரா.யோகேசன்

சிவனொளிபாதமலை அடிவாரத்தின் நகரத்திலும் சீத்த கங்குல கிராம உத்தியோகத்தர் பிரதேசத்திற்குட்பட்ட பெருந்தோட்டங்களின் தேயிலை மலைகளிலும் குளவிக் கூடுகள் அதிகமாக இருப்பதால், மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக குறித்த குளவிக் கூடுகள் நல்லதண்ணி நகரத்துக்கு அருகிலுள்ள விஹாரை, நல்லதண்ணி தோட்டம் கீழ் பிரிவிலும் அதிகளவு காணப்படுவதாகவும், இதனால் தமது தொழில் நடவடிக்கைகளை சிரமத்தின் மத்தியிலேயே முன்னெடுப்பதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் நல்லதண்ணி பிரதேசத்துக்கு, சிவனொளிபாதமலை யாத்திரை காலம் அல்லாத நாள்களிலும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவு வருகைத் தருகின்றனர்.

இவ்வாறான ஒரு பிரதேசம் மிகவும் பாதுகாப்பான பிரதேசமாகவிருப்பது அவசியம் என்பதால், பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள குறித்த குளவிக் கூடுகளை சம்பந்தப்பட்டவர்கள் அப்புறப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.



## இரத்ததான நிகழ்வு...

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் 70ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, ஸ்ரீ சுகட்சியின் கொத்மலை பிரதேச குழுவினரின் ஏற்பாட்டில், கொவிட்– 19 பேரிடர் கால இரத்ததான நிகழ்வு, கொத்மலை பிரதேச சபையில் நேற்று (07) இடம்பெற்றது. (எஸ். கணேசன்)

# தம்பானையில் செல்பிக்கு தடை

பாலித ஆரியவன்ஸ

மஹியங்கனை, தம்பானை கிராமத்துக்கு சுற்றுலா செல்பவர்கள், ஆதிவாசிகளுடன் இணைந்து, செல்பி எடுக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிய எத்தோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த கிராமத்துக்கு தற்போது, உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகத் தெரிவித்துள்ள அவர், அவ்வாறு வருபவர்கள் கட்டாயமாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் தம்பானை கிராமத்துக்கு வருகை தருபவர்கள், எந்தவோர் ஆதிவாசிகளுடனும் இரண்டு மீற்றர் சமூக இடைவெளியைப் பின்பற்றியே உரையாட வேண்டும் என்றும் பணித்துள்ளார்.



## நவராத்திரி விரதம் ஆரம்பம்

ஹட்டன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட டிக்கோயா நுண்கலை கல்லூரியில் நவராத்திரி விரதம் பாடசாலையின் அதிபர் மூக்குபிள்ளை மூவேந்தன் தலைமையில் நேற்று (07) ஆரம்பமானது.
கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் மாத்திரமே கலந்து கொண்டனர். (கே. சுந்தரலிங்கம்)

நுவரெலியா கல்வி வலயம்

# ஆங்கில பாடத்தில் பாரிய முன்னேற்றம்

பி.கேதீஸ்

மத்திய மாகாணத்தில், நுவரெலியா கல்வி வலயம் இம்முறை வெளியான க.பொ.த சா/தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி, ஆங்கில பாடத்தில் பாரிய வளர்ச்சி கண்டுள்ளதாக, நுவரெலியா கல்வி வலயத்தில் ஆங்கில பாடத்திற்கு பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர் செல்வி பாமினி செல்லதுரை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் தெரிவிக்கையில், பௌதீக வளங்கள், ஆளணி வசதிகளில் மிகவும் பற்றாக்குறையாகவும் அதிகுளிர் பிரதேச பாடசாலைகளை அதிகமாக கொண்டு காணப்படும் நுவரெலியா கல்வி வலயத்தில் இம்முறை, மாணவர்களின் ஆங்கில பெறுபேறுகள் வளர்ச்சியடைந்துள்ளன.

இவ்வலயத்தில் மிக நீண்டகாலமாக ஆங்கில பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர்கள் இல்லாமை கவலையளிக்கின்றது. இவ்வலயத்தில் 157 பாடசாலைகள் காணப்படுகின்றன. அதில் 3 கோட்டங்கள் காணப்படுகின்றன. இங்கு சேவையாற்ற நான்கு ஆசிரிய ஆலோசகர்கள் தேவைப்படுகின்றனர்.

அத்தோடு இங்கு ஆங்கில உதவி கல்வி பணிப்பாளரும் கிடையாது. இவ்வாறான நிலையில், ஆங்கில ஆசிரியர்கள், நுவரெலியா கல்வி வலய பிராந்திய ஆங்கில மொழி மூல இணைப்பாளர்களான கமலா வில்ஷன், தம்மிக்கா கோதாபத்திரன போன்றோரின் அயராத உழைப்பின் காரணமாக, இன்று ஆங்கில பெறுபேறுகள் உச்சம் தொட்டுள்ளன.

மத்திய மாகாணத்தில் காணப்படும் 15 கல்வி வலயங்களில் நுவரெலியா கல்வி வலயம் ஆங்கில பாட பெறுபேறுகளில் 5ஆம் இடத்திற்கு உயர்ந்துள்ளது. நுவரெலியா கல்வி வலயத்தில் ஆங்கில பாடத்திற்கு தோற்றிய 3,393 மாணவர்களில் 1,875 பேர் சித்தியடைந்துள்ளனர். இதில் 130 பேர் ஏ தர சித்தியையும் 152 பி தர சித்தியையும் 565 பேர் சி தர சித்தியையும் 1,028 பேர் எஸ் தர சித்தியையும் பெற்றுள்ளமை நுவரெலியா கல்வி வலயத்திற்கு கிடைத்த வெற்றியாகும். 55 சதவீதமானோர் ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றுள்ளனர். இவ்வாறான வளர்ச்சியை பெற்றுக்கொள்வதற்கு காரணகர்த்தாவாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள்,அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவி கல்விப் பணிப்பாளர்கள், மேலதிக கல்விப் பணிப்பாளர்கள், வலய கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

# களுபான விபத்தில் 14 பேர் காயம்

எம். செல்வராஜா


இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான. பஸ்ஸொன்றும் ஓட்டோவொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில், 14 பேர் காயமடைந்து, ஹல்துமுல்ல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹல்துமுல்ல, களுபான என்ற இடத்தில் நேற்று (7) காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடையிலிருந்து பண்டாரவளை நோக்கி பயணித்த பஸ்ஸானது, எதிர்திசையில் பயணித்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளதுடன், இதன்போது ஓட்டோவில் பயணித்த மூவருடன், பஸ்ஸில் பயணித்த 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஓட்டோவில் பயணித்த மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், இச்சம்பவம் தொடர்பில் ஹல்துமுல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# அஸ்கிரிய விகாரையின் மதில் உடைந்தது



ஹேற்றன் செனவிரத்ன

கண்டி, அஸ்கிரிய விகாரையின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு மதில், நேற்று முன்தினம் (6) மாலை உடைந்து வீழ்ந்துள்ளது.

40 அடி உயரமான குறித்த மதிலின் ஒரு பகுதியே இவ்வாறு உடைந்து வீழ்ந்துள்ளது.

# பென்டோரா பரபரப்பும் உலக பிரபலங்களின் களவான கணக்குகளும்

சட்டவிரோதமான தங்கள் வருமானத்தை மறைத்து, வரி கட்டுவதைத் தவிர்த்து, வெளிநாடுகளில் முதலீடு செய்வதன் மூலம், கோடிக்கணக்கில் பணம் பதுக்கல் செய்யும் உலகப் பிரபலங்களின் பெயர்ப் பட்டியலை, 'பென்டோரா பேப்பர்ஸ்' அண்மையில் வெளியிட்டதை அடுத்து, பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அரசியல் தலைவர்கள், பல நாடுகளின் பிரதமர்கள், தொழிலதிபர்கள், விளையாட்டு வீரர்கள் என சுமார் 91 நாடுகளைச் சேர்ந்தவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை, புலனாய்வு பத்திரிக்கையாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு வெளியிட்டமையால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அந்தப் பட்டியலில், இலங்கையின் தலைவர்கள் இல்லையெனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, இருப்போர் குறித்து விசாரணைகளை நடத்தி, ஒருமாதத்துக்குள் அறிக்கையை கோரியுள்ளார். அவ்வறிக்கையில், பிரபல தொழிலதிபரான திருக்குமார் நடேசன், அவரது மனைவியான முன்னாள் பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்‌ஷ ஆகியோரின் பெயர்களே 'பென்டோரா பேப்பர்ஸில்' உள்ளன.

பென்டோரா அல்லது பண்டோரா என்பது, உலகின் முதல் பெண் தெய்வமாக கருதப்படுகின்றது. எல்லாக் கடவுளுக்கும் கடவுளான 'சியூஸ்', பென்டோராவிடம் ஒரு ஜாடியை பரிசாகக் கொடுத்து, "இதை நீ எப்போதும் திறக்கக்கூடாது" எனக் கூறியிருக்கின்றார். எனினும், அந்த ஜாடியை, பென்டோரா திறந்துவிட்டது. அந்த ஜாடிக்குள் இருந்த அனைத்துத் தீமைகளும் வெளியேறி, உலகம் முழுவதும் பரவிவிட்டன என்பதுதான் கிரேக்க நாட்டு ஐதீகம்.

செல்வந்தர்கள் வரிப்பணம் செலுத்தாமல் இருப்பது, நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும். செல்வந்தரும் ஏழையும் பெரும் ஆதாயத்தை ஓரளவுக்கேனும் சமன் செய்வது செல்வந்தர் செலுத்தும் வரியால் ஆகும்.

நாட்டில் இருக்கும் பெரும்பான்மை ஏழை மக்களால் கொள்வனவு செய்யப்படும் பொருள்களுக்கான கொடுக்கல்- வாங்கலில் வர்த்தகர் வரிசெலுத்துகின்றார். பெரும்பாலும் அந்த வரிகள் எல்லாம், நுகர்வோரின் தலையில் சுமத்தப்பட்டுவிடுகின்றன.

வரிசெலுத்தாமல், வெளிநாடுகளில் பெரும் தொகை பணத்தை வைப்பீடு செய்திருப்பது வருந்தக்கூடியது. நேர்மை, நியாயமான முறையில் பணத்தைச் சம்பாதித்திருந்தால், களவானமுறையில் கணக்குகளைப் பேணவேண்டியதில்லை.

சொத்துகளின் பெறுமதியை மறைத்து, இரகசியம் காத்தல் என்பது, அந்தப் பணம் திரட்டப்பட்ட வழிகளைத் தெளிவுப்படுத்த முடியாமையால் ஆகும். வரி ஏய்ப்புச் செய்து, கணக்குகளைப் பேணுபவர்களிடம் முறையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சட்டத்தைத் தயாரிக்கவேண்டும். பணச்சலவை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு, ஆரம்பப் புள்ளியை இடுவதன் ஊடாகவே, வரி ஏய்ப்பாளர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

'பென்டோரா' வெளிப்படுத்தியவர்களிடத்தில் முறையாக விசாரணைகளை நடத்தி, சந்தேகம் களையப்பட வேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.

---


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




---

# மரணமும் சில கதைகளும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி, தந்தையார் திடீரென்று காலமானார். அவ்வதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளாவிட்டாலும், சொல்ல வேண்டிய சில கதைகளும் பகிரவேண்டிய சில செய்திகளும் பதிவாக்கப்பட வேண்டியவை. அதற்காக இந்தவாரப் பத்தியைப் பயன்படுத்த விரும்புகிறேன். இந்நிகழ்வுகள், இலங்கையின் எதிர்காலம் குறித்த கேள்விகளை எழுப்புகின்றன. அறம் குறித்துத் தொடர்ந்து போதிக்கப்படும் கற்பிதங்கள் மீது கல்லெறிகின்றன.

ஒருமரணம் தரும் வேதனையையும் அதிர்ச்சியையும், அதைத் தொடர்ந்து நிகழும் நிகழ்வுகள் மேலோங்கச் செய்யும்போது, விரக்தியும் வெறுப்புமே மிஞ்சுகின்றன. எந்தவொரு நோயுமற்ற மனிதனின் திடீர் மறைவு ஏற்படுத்திய அதிர்ச்சி ஒருபுறமும் என்ன நடந்தது என்ற விடைதெரியாத கேள்வி மறுபுறமுமாய் காலங்கள் கடக்கின்றன.

அப்பாவின் மரணம் கொரோனா மரணம் என்று பரிசோதனை அறிக்கை வழங்கப்பட்ட நிலையில், அப்பாவை நன்கறிந்த வைத்தியர்கள், இது மாரடைப்பால் ஏற்பட்ட மரணமே என்று வாதிடுகிறார்கள். அது எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்; ஆனால், நிர்வாக ரீதியாக ஒரு மரணத்தைச் சுற்றி நிகழும் நிகழ்வுகள் ஏற்படுத்துகின்ற மனஉளைச்சல் சொல்லி மாளாதவை.

கொரோனா மரணம் என்று 'சொல்லப்பட்ட' ஒரு சமானியனின் உடலை, இறுதியாக ஒருமுறை பார்ப்பதற்கு நிறையவே போராட வேண்டியிருந்தது. உலகில் வாழ்வாங்கு வாழ்ந்த ஒருவரை, இறுதியாகப் பார்க்க குடும்பத்தினருக்கு சில நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டன; கொரோனா நல்ல சாட்டானது.

இலங்கையில் எல்லாக் கொரோனா மரணங்களும் ஒரே மாதிரியானவையல்ல. சில அதிவிஷேசமானவை. அம்மரணச் சடங்குகளில் பலர் பங்குபெறலாம்; பிரித் ஓதலாம்; மரணத்தைக் கூட்டாக நினைவுகூரலாம். ஆனால், மரணித்த சமானியனை இறுதியாக ஒருதடவை பார்ப்பதற்கு, அதிகாரத்துடன் இடையறாது போராட வேண்டும்.

உலகில் இறக்கும் அனைவரும், மரியாதையான இறுதியாத்திரைக்கு உரித்துடையவர்கள். ஆனால், இப்போது இலங்கையில் நடப்பது அதுவல்ல. மரணித்த ஒருவரை மரியாதையாக வழியனுப்ப அனுமதியாத அரசாங்கத்தையும் அதை நடைமுறைப்படுத்தும் மனிதர்களையும் என்னவென்பது? மனித வாழ்வும் மனித மாண்பும் பொருளற்றுப்போன ஒரு தேசத்தில், எதிர்பார்ப்பதற்கு அதிகமில்லைத்தான்.

அப்பாவின் மரணத்துக்கு, 'கொரோனா' காரணமாக்கப்பட்டதால், அதைத் தொடர்ந்து வீடு 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டது. 14 நாள்கள் முடிவடைந்த நிலையில், மேலும் ஏழு நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளானது.

"ஏன் மேலதிகமாக ஏழு நாள்கள்" என்று கேட்கப்பட்ட கேள்விக்கான பதிலை, பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழங்க முடியவில்லை. வீட்டில் உள்ளவர்கள் பி.சி.ஆர் பரிசோதனை செய்யமுடியுமா என்று கேட்டால், "அவசியமில்லை, 21 நாள்கள் வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகினால் போதும்" என்று சொல்லப்பட்டது.

21 நாள்களின் பின்னர் பரிசோதனை செய்ய வேண்டுமா என்ற கேள்விக்கு, வீட்டுக் கதவில் ஒட்டப்பட்டத்தை கிழித்து விட்டு, வெளியே செல்லலாம் என்று பதில் வந்தது. சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்க விரும்புகிறவர்களின் கேள்விகளுக்கான பதில்களோ செயல்களின் நியாயங்களோ என்றும் சொல்லப்படுவதில்லை.

கொரோனா அச்சம், ஒருவகை மனநோயாக உருவெடுத்துள்ளது. அந்நோயை, எயிட்ஸ் நோய்க்கு நிகரானதாகச் சித்திரித்துப் பயம் காட்டும் போக்கு, அபத்தமானது மட்டுமன்றி ஆபத்தானதும் கூட!

இரண்டு சம்பவங்களை இங்கு நினைவுகூர்கிறேன். எங்கள் வீடு தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், எங்கள் வீட்டுக்கு யாரும் வராமல் இருப்பதை உறுதிசெய்யும் பணியை, அயலவர்கள் கண் துஞ்சாது முன்னெடுத்தார்கள். வீட்டுக்கு அனுப்பப்பட்ட பொருட்களைக் கொண்டுவந்தவர்களைத் தடுத்து நிறுத்தி, பொருட்களை வாசலில் வைப்பதை அனுமதிக்கவில்லை. அப்பொருட்களை எடுக்க நாம் கதவைத் திறந்தால், எங்கள் வீட்டில் உள்ள கொரோனா வைரஸ், காற்றின் ஊடாக வெளியே வந்துவிடும் என்று சொன்னார்கள்.

எமக்கு, உணவுப்பொருட்களை கொண்டுவந்த நண்பனொருவனை இடைமறித்து எச்சரித்த அயலவர்கள், முகக்கவசங்களை அணிந்திருக்கவில்லை; சமூக இடைவெளியைப் பின்பற்றவில்லை. ஆனால், நண்பனுக்குக் கொரோனா பற்றிப் பாடமெடுத்தார்கள். மிகக் கொடிய நோயொன்றுக்கு ஆளாகிய மனிதர்களைக் கொண்ட வீடாக எங்கள் வீடு பார்க்கப்பட்டது. இந்த மனநிலை, அச்சத்தின் விளைவிலானது. இந்த அச்சத்தை விதைத்தது யார்? இந்த அச்சத்தில் பயனடைவது யார்? இந்த அச்சம் நாட்டின் ஏனைய விடயங்களில் இருந்து மக்களைத் திசைதிருப்புகிறது.

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக, கொரோனாவுடன் இலங்கையர்கள் அல்லற்படுகிறார்கள். ஆனால், இன்றுவரை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பதிலிறுப்பு ஒன்றைச் செய்ய இயலவில்லை. கொரோனா தொற்றை அரசாங்கம் கையாண்ட விதம், தொடக்கத்திலிருந்து தவறு. கொரோனா பற்றி மிகையான பீதியைக் கிளப்பியதும் போதாமல், எந்த முன்னேற்பாடுகளுமின்றி ஊரடங்கைப் பிறப்பித்து, மக்களை அல்லற்படுத்திய போதும் எவரும் மறுபேச்சுப் பேசவில்லை.

அரசாங்கத்தின் அணுகுமுறையின் கோளாறுகளை, அரசியல் இலாப நோக்கு இல்லாமல், அறிவார்ந்த முறையில் மக்களிடையே பரப்புவதன் மூலமும் பரந்த உரையாடல் மூலமும் பிரச்சினையை கையாளச் சரியான வழிகளை ஆராயவும் எந்த அரசியல் கட்சிக்கும் துணிவிருக்கவில்லை. மக்களிடையே சென்று கலந்துரையாடும் மரபை, அரசியல் கட்சிகள் இழந்து நீண்டகாலமாகிவிட்டது.

அரசாங்கம் போரை வென்றது போல, வைரஸையும் வெல்கின்றது என்ற வெட்டிப்பேச்சு உண்மை போல் தெரிந்த வேளை, ஊமையாய் இருந்தோர் புதிதாக எதை விமர்சிக்க இயலும்? மருத்துவ சேவையினர் ஆற்ற வேண்டிய பணியை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தது தவறு என்று சொல்லும் தைரியம், பலரிடம் இல்லாத காரணம் இராணுவத்துடன் முரண்படத் தைரியமின்மையே. இலங்கை இன்னும் இராணுவமைய சிந்தனைவாதத்திலிருந்து வெளியேறவில்லை. எனவே அதற்கான விலையை கொடுத்தே ஆகவேண்டும்.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்போம் என்று அறிவித்ததன் மூலம், பிரதான எதிர்க்கட்சி அரசாங்கத்தை விமர்சிக்கும் தகுதியை இழந்தது.

இன்றுவரை கேட்கப்படாத கேள்வி யாதெனில், மக்களின் வாழ்வாதாரத்துக்கு கேடின்றி, தொற்றைத் தடுக்கும் வழிகளை அரசாங்கம் ஏன் விசாரிக்கவில்லை என்பது. இப்போது தடுப்பூசிகள் மூலம் தொற்றை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று அரசாங்கம் சொல்லிவருகிறது. தடுப்பூசி அனைத்துக்குமான தீர்வல்ல!

உலக சுகாதார நிறுவனம் 2022 டிசெம்பரில் இத்தொற்று கட்டுக்குள் வருவதற்கு வாய்ப்புண்டு என்று சொல்லியுள்ளது. அதுவரை என்ன செய்வது? மேற்குலக நாடுகள் போல மூன்றாவது, நான்காவது தடுப்பூசிகளுக்குச் போகப்போகிறோமா?

ஆட்சியாளர்களுக்கு கொரோனா நல்லதொரு காரணமாகிவிட்டது. அனைத்தையும் அதன் மீது போடவும் பொறுப்புகளில் இருந்து நகரவும் இயலுமாகிறது. இலங்கையின் ஆட்சியாளர்களின் செயல்களைப் பார்க்கும் போது, டொன் கிஹோட்டே நினைவுக்கு வருகிறது.

மிஹுவெல் டி செர்வான்டெஸ் 1605இல் ஸ்பானிய மொழியில் எழுதிய 'டொன் கிஹோட்டே' (Don Quixote) உலகின் அதி சிறந்த ஆக்க இலக்கியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதை உலகின் முதலாவது நாவல் எனவும் கூறுவர். 'லா மன்ச்சாவின் கூர்மதி மிக்க இடால்ஹோ டொன் கிஹோட்டே' (The ingenious Idalgo Don Quixote of la Mancha) எனும் தலைப்பில் வெளியான இந்நாவலின் இரண்டாம் பாகம் 1615இல் வெளியானது.


50 வயது தாண்டிய கிராமத்துக் கனவானான அலொன்ஸோ கிஹானோ, வீரசாகசக் கதைகள் பலவற்றை வாசித்து, அவற்றால் மிகுதியாகப் பாதிக்கப்பட்டு, தன்னையும் முன்னைய காலத்து வீரப் பெருந்தகைகளில் ஒருவனாகக் கற்பனை செய்து, தன்னை 'லா மன்ச்சா என்ற ஸ்பெயினிலுள்ள பெருநிலப்பரப்பொன்றின் டொன் கிஹோட்டே' என அழைத்துக் கொண்டு, சாகசச் செயல்களில் ஈடுபட விழைகிறான். தனது நோஞ்சான் குதிரைக்கு 'றொசினாட்டே' எனப் பெயரிடுகிறான்.

டொன் கிஹோட்டேயினது வீரசாகசப் பயணம் தொடர்கையில், யதார்த்தம் பற்றிய உணர்வே அவனிடம் இல்லாமல் போகிறது. டொன் கிஹோட்டே, வலிந்து வம்பை விலைக்கு வாங்கி, அடி உதையையும் அவமானத்தையும் பெற்றாலும், அவனுக்குத் தன்னைப் பற்றிய மயக்கம் தீராது. மேலும் கற்பனையான எதிரிகளுடன் மோதுகிறான்.

லா மன்ச்சா பீடபூமியின் நிற்கும் பெரிய காற்றாலைகள் அவனுக்குப் பயங்கர இராட்சதர்களாகத் தெரிகின்றனர். குதிரையில் ஏறிக் குத்தீட்டியுடன் காற்றாலைகளைப் போரிட்டுப் பலமுறை விழுகிறான்.

நூலின் இரண்டாம் பாகத்தில், டொன் கிஹோட்டேக்குக் காலங்கடந்து நிதானம் திரும்பிய போது, வாழ்க்கை பொருளற்றுப் போகிறது. டொன் கிஹோட்டே, ஏளனத்துக்குரிய ஒரு கதாநாயகன். தம்மைப் பற்றி மிகையான மதிப்புடையோராகத் தம்மாலேயே உலகை உய்விக்க இயலும் என எண்ணுவோருக்குரிய ஒரு படிமமாக டொன் கிஹோட்டேயைக் கொள்ளலாம். இலங்கையின் டொன் கிஹோட்டே யாரென்பதை, நீங்களே முடிவுசெய்து கொள்ளுங்கள்.

---



## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனதை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனதை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம்; மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேக சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப்பொழுதுக்குள், மனம் புதியபுதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. அத்துடன் தேவையற்ற விடயங்களையும் அசைபோடுகின்றது.

திடீரென வெளிநாடுகளில் இருப்பது போலவும், அடுத்த நொடி, வேறு வெறுப்பான விடயங்களுக்குள் தன்னைப் புகுத்தியும் விடுகின்றது. மனதின் இயக்கம் நிற்பதும் இல்லை.

இதனால், தேகம் அல்லாடும் விதமாக இது செயற்படுகின்றது. கனவுகள் இன்பம் ஊட்டும்; துன்பங்களையும் பரப்பும்.

எனவே, மனிதன் நிம்மதியாக வாழ, புலன் அறிவைத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். நல்லதை மட்டும் உறிஞ்சும் திறனை வளர்த்திடுக.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மாவடிப்பள்ளியில் யானைகள் அட்டகாசம்


அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, மாவடிப்பள்ளி வீட்டு குடியிருப்புகளை நோக்கி ஊடுருவிய காட்டு யானைகளின் நடமாட்டத்தால், பிரதேசவாசிகள் அச்சமடைந்துள்ளனர். காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி மக்கள் குடியிருப்பு பிரதேசத்துக்குள் யானைகளின் அட்டகாசத்தால், வீட்டு மதில்கள், பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இரவு நேரங்களில், யானை வரும் என்ற அச்சம் நிலவிவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகளின் அட்டகாசத்தால் பயிர்கள் அதிகமாக சேதமாகி உள்ளதுடன், வீட்டில் தங்கியிருந்த மக்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். மேலும், இரவு வேளைகளில் ஊடுருவும் காட்டு யானைகள், அயலிலுள்ள காடுகளுக்குள் இருந்து, குறித்த கிரமங்களுக்குள் வந்து சேதம் விளைவித்து வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

யானைகள் கூட்டம், வீட்டு மதிலை உடைத்துச் சேதம் விளைவித்ததோடு, பயன்தரும் பயிர்களையும் மரங்களையும் துவம்சம் செய்து சென்றுள்ளன.

காட்டு யானைகள் ஏற்படுத்தும் சேதம் தொடர்பாக, கிராம சேவையாளரிடமும் பொலிஸாரிடமும் கிராம மக்கள் அறிவித்துள்ளதாகத் தெரிவித்தனர். எனினும், காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து, நிரந்தர தீர்வைப் பெற்றுத்தருமாறு பாதிக்கப்படும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

-நூருல் ஹுதா உமர்




கொல்கட்டா

கல்லீரலை தானமாகக் கொடுத்து

# தந்தையின் உயிரை காப்பாற்றிய தனயன்

சில மாதங்களே உயிருடன் இருப்பார் என டொக்டர்கள் கூறிய நிலையில், தன் கல்லீரலின் ஒரு பகுதியை தானமாக தந்து, தனக்கு உயிர் கொடுத்த தந்தையின் உயிரைக் காப்பாற்றி உள்ளார் மகன்.

மேற்கு வங்க மாநிலம் கோல்கட்டாவைச் சேர்ந்த ஒரு தந்தைக்கு கல்லீரல் பாதிப்பு ஏற்பட்டது. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யாவிட்டால், ஆறு மாதங்கள் மட்டுமே அவர் உயிருடன் இருப்பார் என டொக்டர்கள் கூறியுள்ளனர். இதனால், அவருடைய குடும்பமே அதிர்ச்சியில் உறைந்தது. ஒரு பக்கம் சிகிச்சை நடந்து வந்த நிலையில்,



தந்தைக்கும், அவருடைய மகனுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டது. வீட்டில் இருவரும் தனிமைப்படுத்திக் கொண்டனர்.

சேர்ந்து விளையாடி பொழுதைப் போக்கினர். அப்போது, தன் தந்தையின் நிலை குறித்து மகன் மிகவும் வருத்தம் அடைந்தார். தந்தையின் உயிரைக் காப்பாற்ற எதையும் செய்யலாம் என முடிவு செய்தார். கொரோனாவில் இருந்து மீண்ட உடன், தன் கல்லீரலை தந்தைக்கு தானமாக வழங்க மகன் முன்வந்தார். ஆனால், கொழுப்பு சத்து அதிகம் இருந்தது. அதையடுத்து உடற்பயிற்சி, உணவு கட்டுப்பாடு வாயிலாக கொழுப்பைக் குறைத்தார் மகன்.

பின், டொக்டர்கள் அறுவை சிகிச்சை செய்து, மகனின் 65 சதவீத கல்லீரலை எடுத்து, தந்தைக்கு பொருத்தி உள்ளனர். சிகிச்சைக்கு பின், இருவரும் நல்ல உடல் நலத்துடன் உள்ளனர். உயிர் தந்த தந்தைக்கு இதைவிட பெரிய பிரதிபலனை செய்ய முடியாது என, கண்ணீரில் மகன் திளைத்தார்.

விஜயவாடா

# திருப்பதி அறங்காவலர் குழுவில் அதிகபட்ச உறுப்பினர்கள்



திருப்பதி அறங்காவலர் குழுவில் அதிகபட்சமாக 81 பேர் உறுப்பினர்களாகவும், சிறப்பு அழைப்பாளர்களாகவும் அரசாங்கம் நியமனம் செய்ததை எதிர்த்து, ஆந்திர உயர் நீதிமன்றத்தில் 3 பேர் வழக்கு தொடர்ந்தனர். இதனை விசாரித்த நீதிமன்றம், 51 சிறப்பு அழைப்பாளர்கள் நியமனத்துக்கு இடைக்கால தடை விதித்துள்ளது. இதனால் இதுவரை யாரும் பதவி பொறுப்பு ஏற்கவில்லை.

இவ்வழக்கு விசாரணைக்கு வந்த போது மனுதாரரும் எதிர்தரப்பு வழக்கறிஞருமான அஸ்வினி குமார் கூறும்போது, 'தேவஸ்தான அறங்காவலர் குழுவில் உறுப்பினர்களாக உள்ள 24 பேரில், 14 பேர் குற்றப்பின்னணி கொண்டவர்களாவர். மேலும் 4 பேர் அரசியல் ரீதியில் காய் நகர்த்தி, உறுப்பினர்களாகி உள்ளனர். ஆதலால் இந்த 18 பேருக்கும் உறுப்பினர்களாக நீடிக்க எவ்வித தகுதியும் கிடையாது' என வாதிட்டார்.

சென்னை

# 'வணக்கம் தமிழகம்; பிரதமரின் தமிழ் முழக்கம்'

'வணக்கம் தமிழகம் - பிரதமரின் தமிழ் முழக்கம்' என்ற புத்தக வெளியீட்டு விழா, சென்னையில் நடந்தது.

'ப்ளூ ஓஷன் புக்ஸ்' மற்றும் அகண்ட தமிழ் உலகம் ஆகிய அமைப்புகள் இணைந்து, 'வணக்கம் தமிழகம் -- பிரதமரின் தமிழ் முழக்கம்' என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளன. சென்னையில் நடந்த நிகழ்ச்சியில், மத்திய வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்திர யாதவ், காணொளி வாயிலாக புத்தகத்தை வெளியிட்டார்.

மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பாரதிய ஜனதா தேசிய பொதுச் செயலர் சி.டி. ரவி ஆகியோர் காணொளி வாயிலாக பங்கேற்றனர். தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை, தேசிய மகளிர் அணி தலைவி



வானதி சீனிவாசன், மாநில இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

அண்ணாமலை பேசியதாவது: பிரதமர் மோடி, குஜராத் முதலமைச்சராக, 13 ஆண்டுகள்; பிரதமராக, 7 ஆண்டுகள் என, இன்றுடன், 20 ஆண்டு அரசியல் பயணத்தை பூர்த்தி செய்கிறார். இதில், குஜராத் முதலமைச்சராக இருந்தபோது, மோடி தமிழகத்துக்கு வந்து முதன்முதலில் பேசிய விஷயங்கள் என, அனைத்தும் புத்தகத்தில் உள்ளன.

லக்கிம்பூர்

# நீதியை மட்டும்தான் கேட்கிறார்கள்

உத்தரப்பிரதேசம், லக்கிம்பூர் கெரியில் நடந்த போராட்டத்தில் கொல்லப்பட்ட விவசாயிகளின் குடும்பத்தார் நீதி ஒன்றை மட்டும்தான் கேட்கிறார்கள் என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்தார்.

லக்கிம்பூர் கெரியில் நடந்த போராட்டத்தில் நடந்த வன்முறையில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்தாரைச் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, காங்கிரஸ் மூத்த நிர்வாகி தீபேந்தர் ஹூடா உள்ளிட்ட பலர் லக்கிம்பூருக்கு சென்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பிரியங்கா காந்தி கடந்த 28மணிநேரமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில் காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி, சத்தீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகல், பஞ்சாப் மாநில துணை முதலமைச்சர், காங்கிரஸ் மூத்த நிர்வாகிகள் பலர் லக்கிம்பூர் கெரிக்கு செல்வதற்காக லக்னோ விமானநிலையத்துக்கு வந்தனர். ஆனால், அவர்களை அனுமதிக்க பொலிஸார் மறுத்துவிட்டதால்,



ராகுல் காந்தி விமான நிலையத்தில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதைத் தொடர்ந்து லக்கிம்பூர் கெரிக்குச் செல்ல ராகுல் காந்தி, சத்தீஸ்கர் முதலமைச்சர் பஞ்சாப் துணை முதலமைச்சர் ஆகியோருக்கு உத்தரப் பிரதேச அனுமதியளித்தது. சீதாபூர் துணை ஆட்சியர் பியாரேலால் மவுரி உத்தரவின்பெயரில் பிரியங்கா காந்தியும் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

பொலிஸாரின் விருந்தினர் மாளிகைக்குச் சென்ற பிரியங்கா காந்தி,ராகுல் காந்தி, சத்தீஸ்கர் முதலமைச்சர், பஞ்சாப் முதலமைச்சர் ஆகியோர் ஒருமணிநேரம் ஆலோசனை நடத்தினர். அதன்பின், பிரியங்கா காந்தி, ராகுல் காந்தி இருவரும் ஒரே காரில் லக்கிம்பூருக்கு புறப்பட்டனர்.

கொல்கட்டா

# தோழமை கட்சிகளில் குழப்பம்



தோழமைக் கட்சி என்றும் பாராமல், தங்கள் தலைவர்களை வளைத்து வருவதால், ஆத்திரமடைந்துள்ள காங்கிரஸ், மேற்கு வங்கத்தில் இனி நடக்க இருக்கும் இடைத் தேர்தல்களில், வேட்பாளர்களை களமிறக்க முடிவுசெய்துள்ளது.

மேற்கு வங்கத்தில் காங்கிரஸ், தலைவர்களை, திரிணமுல் காங்கிரஸ், தன் பக்கம் இழுத்து வருவதால், காங்கிரஸ் நிலைமை மிகவும் மோசமாகி வருகிறது. சமீபத்தில் காங்கிரஸின் மூத்த தலைவரும், கோவா முன்னாள் முதலமைச்சருமான லூசினோ பெலிரோ, திரிணமுல் காங்கிரஸ், கட்சியில் இணைந்தார்.

அதற்கு முன், காங்கிரஸ், தேசிய மகளிர் அணி தலைவராக இருந்த சுஷ்மிதா தேவ், திரிணமுல் காங்கிரஸில் இணைந்து, ராஜ்யசபா எம்.பி., பதவியை பெற்றார். இவை, காங்கிரஸ், கட்சியினர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. எதிர்வரும் 2024ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில், பா.ஜ.,வுக்கு எதிரான அணியை அமைக்கும் முயற்சிகளில், காங்கிரஸ், - திரிணமுல் காங்கிரஸ்., உள்ளிட்ட கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன.

பொங்கோன்

# பச்சிளம் குழந்தைகள் விற்பனை; இரு பெண்கள் கைது

பெங்களூர் மெஜஸ்டிக் அருகே சிட்டி ரெயில் நிலையத்தில் பச்சிளம் குழந்தையை விற்பனை செய்ய முயற்சி நடப்பதாக குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது. உடனே அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அங்கு விரைந்து சென்றனர். அப்போது குழந்தையுடன் சந்தேகம் ஏற்படும் படியாக சுற்றிய 2 பெண்களை பொலிஸார் விசாரணை நடத்தினர். இதன்போது இரண்டு பெண்களும் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னார்கள்.

பின்னர் நடத்தப்பட்ட விசாரணையில், அந்த குழந்தையை விற்பனை செய்ய ஒரு பெண் முயன்றதும், மற்றொருவர் குழந்தையை வாங்க வந்திருந்ததும் தெரிந்தது. இதையடுத்து, 2 பெண்களையும் பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து பிறந்து ஒரு மாதமே ஆன பெண் குழந்தையை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் மீட்டனர்.



நிலைபேறாண்மையை நோக்கிய பயணத்துக்காக

# co-energi உடன் Ex-Pack கைகோர்ப்பு

தமது வியாபார செயற்பாடுகளின் காரணமாக சூழலுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளும் வகையில், Aberdeen Holdings Pvt Ltd இன் துணை நிறுவனமும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்காக அலைவுநெளிவான பொதியிடல் தீர்வுகளை உற்பத்தி செய்யும் நிறுவனமுமான Expack Corrugated Cartons Ltd, co-energi உடன் கைகோர்த்துள்ளது.

நிலைபேறான மற்றும் வள வினைத்திறன் வாய்ந்த வடிவமைப்புகளை வழங்குவதில் சுயாதீன நிபுணத்துவ நிறுவனமாகத் திகழும் co-energi இனால், Expack இன் நிலைபேறாண்மை தொடர்பான பயணத்துக்கு உயர் உணர்திறன், புத்தாக்கம் மற்றும் சட்ட ரீதியில் ஏற்புடைய வழிமுறைகளை வழங்கி பங்களிப்புச் செய்யும்.

உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளதுடன், பார இயந்திரங்களை பயன்படுத்துவது என்பதன் காரணமாக பரந்தளவு சூழலில் ஏற்படக்கூடிய தாக்கத்தை குறைத்துக் கொள்ளவது என்பது எப்போதும் சவால்கள் நிறைந்த விடயமாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும், நிலைபேறாண்மை மற்றும் தொடர்ச்சியான மேம்படுத்தல் பணிகளுக்கான தமது ஒப்பற்ற அர்ப்பணிப்பின் காரணமாக, Expack இனால் பல்வேறு வலுப் பாதுகாப்பு நிகழ்ச்சிகளை அர்த்தமுள்ள வகையில் முன்னெடுத்து சூழலுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது.

Expack இன் தவிசாளர் சத்தார் காசிம் கருத்துத் தெரிவிக்கையில், சூழலை பாதுகாப்பதில் Expack தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், சப்புகஸ்கந்த பகுதியில் அமைந்துள்ள தமது தொழிற்சாலைக்கு LEED and Carbon Neutral Certification ஐ பெற்றுக் கொள்ளும் பணிகளை அண்மையில் ஆரம்பித்துள்ளது. இதனூடாக காலநிலை மாற்றம் மற்றும் உயிரியல் பரம்பலுக்கு எதிரான போராட்டத்தின் பிரதான பங்களிப்பு வழங்கும் பங்காளராக கைகோர்த்து செயலாற்றும் பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனமாகவும் அமைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டளவில் காபன் நடுநிலை நிறுவனமாக திகழ்வதற்கான உறுதியை நிறுவனம் கொண்டுள்ளது.

co-energi என்பது கட்டட பொறியியல் ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனமாகும், 'SMART DESIGN' எனும் கொள்கையின் பிரகாரம் இதன் பெறுமதிகள் மற்றும் கொள்கைகள் போன்றன அமைந்துள்ளன. Green Building, MEP Design Consultancy மற்றும் Carbon Neutral Consultancy போன்றவற்றிலும் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

10 வருடங்களுக்கு மேலாக உயர் வினைத்திறன் வாய்ந்த AC கட்டமைப்புகள், rooftop solar designs, energy audits, MEP designs/ retro fittings போன்றவற்றை வடிவமைப்பதில் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், இலங்கையிலும் பங்களாதேஷிலும் 12 க்கும் அதிகமான LEED Certification களை எய்துவதற்கு பங்களிப்பு வழங்கியுள்ள co-energi, Expack நிறுவனத்துக்கு இந்தப் பயணத்தில் ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

Leadership in Energy and Environmental Design (LEED) என்பது உலகின் மிகச் சிறந்த Green Building Certification ஆக அமைந்துள்ளது. இதனை US Green Building Council வழங்குகின்றது. தொழிலாளர் சுகாதாரத்துக்கு மிகவும் குறைந்த தாக்கம் மற்றும் இயற்கை சூழலுக்கு குறைந்த பாதிப்பு மற்றும் செயலாற்றும் காலப்பகுதியில் உயர் வள வினைத்திறனை பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில், சூழல் பொறுப்புணர்வுடன் கட்டடங்களை வடிவமைத்து நிர்மாணித்தல் மற்றும் செயற்பாடுகளை ஒன்றிணைத்தல் போன்றவற்றுக்கு இது நிறுவனங்களுக்கு உதவுகின்றது.

# ஒப்பற்ற சொப்பிங் அனுபவத்தை வழங்க செலான் வங்கி SUPERBOX உடன் கைகோர்ப்பு



செலான் வங்கி, 'SUPERBOX' உடன் பிரத்தியேகமான பங்காண்மையை ஏற்படுத்தி பாதுகாப்பான கொடுப்பனவு கட்டமைப்பை உருவாக்கி வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பாக சிக்கல்களின்றி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடிய வசதியை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

நாட்டின் அண்மையில் முழுமையாக ஒன்றிணைக்கப்பட்ட ஒன்லைன் சுப்பர்மார்கெட்டாக திகழும் SUPERBOX, பலசரக்கு பொருட்கள் விற்பனையில் விசேடத்துவம் பெற்றுள்ளது. இலங்கையர்களுக்கு சேவையாற்றும் நோக்கில் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. வாடிக்கையாளர்களுக்கு பசுமையான, குளிர வைக்கப்பட்ட, உறைய வைக்கப்பட்ட மற்றும் உலர்ந்த பல தயாரிப்புகளை வழங்குகின்றது. சிக்கல்களில்லாத சொப்பிங் அனுபவத்தை உறுதி செய்யும் வகையில், இலங்கையின் நுகர்வோரின் நடத்தையை புரிந்து கொள்ளும் வகையில் ஆய்வு முன்னெடுக்கப்பட்டு பாவனையாளருக்கு நட்பான வகையில் இந்த இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலகுவான மற்றும் பாதுகாப்பான முறையில் பல்வேறு டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கக்கூடிய தொழில்நுட்ப ரீதியான கட்டமைப்பான MasterCard Payment Gateway Service (MPGS) ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் SUPERBOX உடன் செலான் வங்கி கைகோர்த்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, வாடிக்கையாளர்களுக்கு தமது வீடுகளில் சௌகரியமாக இருந்தவாறு தினசரி அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்பதுடன், அவற்றை தமது இருப்பிடத்துக்கு பாதுகாப்பாக விநியோகித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனூடாக இந்த நெருக்கடியான காலப்பகுதியில் அநாவசியமாக பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக செலான் வங்கியின் டிஜிட்டல் வங்கியியல் நாளிகைகளின் தலைமை அதிகாரி சமிந்த செனெவிரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "செலான் வங்கியுடனான பங்காண்மையின் காரணமாக, SUPERBOX வாடிக்கையாளர்களுக்கு தற்போது மேம்படுத்தப்பட்ட, பாதுகாப்பான மற்றும் வேகமான சொப்பிங் அனுபவத்தை பெற்றுக் கொள்ள முடியும். இந்த இணையத்தளத்தினூடாக வாடிக்கையாளர்களுக்கு தமக்கென profile ஒன்றை உருவாக்கி, வெளிநாடுகளில் வசித்தாலும், இலங்கையிலுள்ள தமது அன்புக்குரியவர்களுக்கு விநியோகங்களை மேற்கொள்ள முடியும். உள்நாட்டு நிறுவனத்தின் உயர் தர பொறியியலுக்கு சிறந்த உதாரணமாக இது அமைந்துள்ளது. நுகர்வோரை கவனத்தில் கொண்டு அனுபவத்தின் ஒவ்வொரு அங்கமும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நுகர்வோரின் சௌகரியத்துக்கு முக்கியத்துவமளிக்கும் நிறுவனம் எனும் வகையில் செலான் வங்கி, Mastercard Payment Gateway சேவையுடனான பங்காண்மை என்பது இலகுவான மற்றும் பாதுகாப்பான கொடுக்கல் வாங்கல் செயன்முறைகளை உறுதி செய்யும் என்பதுடன், SUPERBOX இலிருந்து கொள்வனவு செய்யும் சகல நுகர்வோருக்கும் மோசடிகளை தவிர்த்துக் கொள்வதற்கும் உதவும். இதனூடாக உயர் தரம், வேகம் மற்றும் தங்கியிருக்கக்கூடிய ஒன்லைன் பலசரக்கு சொப்பிங் அனுபவத்தை வழங்குகின்றது" என்றார்.




பாகிஸ்தான்

### பாகிஸ்தானில் நிலநடுக்கம்

# 20 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தின் ஹர்னாய் பகுதியில் நேற்று (07) அதிகாலை 3.30 மணியளவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 20 பேர் இறந்துள்ளனர் எனவும் சுமார் 300 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நில நடுக்கமானது ரிச்டர் அளவில் 5.7 எனப் பதிவாகியுள்ளதாகப் பலுசிஸ்தான் மாகாண பேரிடர் மேலாண்மை ஆணையகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்நிலநடுக்கத்தால் வீடுகள் பல சேதமடைந்துள்ளன. இதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் நிவாரணப் பணிகள் தொடர்வதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

துருக்கி

### பொதுப் போக்குவரத்தில்

## தினமும் 30 கி.மீ பயணிக்கும் 'போஜி'



தெரு நாய் ஒன்று நாள் தவறாமல் பொது போக்குவரத்தைப் பயன்படுத்தி வருகின்ற விநோத சம்பவம் துருக்கியில் இடம்பெற்று வருகின்றது.

'போஜி' என அழைக்கப்படும் குறித்த நாயானது இஸ்தான்புலில் உள்ள பஸ்கள் மற்றும் மெட்ரோ ரயில்களில் மனிதர்களைப் போல் தினமும் பயணிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ்கள், மெட்ரோ ரயில்கள் மட்டுமின்றி மர்மரா கடலில் உள்ள தீவுகளுக்கும் போஜி படகுச் சவாரி செய்வதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் சக பயணிகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாத போஜிக்கு மிகப் பெரிய ரசிக பட்டாளம் காணப்படுவதாகவும், இதனால் போஜியின் பேரில் தொடங்கப்பட்டுள்ள சமூக வலைத்தள கணக்குகளில் தினமும் அதனுடன் எடுக்கப்படும் புகைப்படங்களை சக பயணிகள் பகிர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



தாய்லாந்து

## வாந்தியால் லட்சாதிபதியான மீனவர்



தாய்லாந்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் திமிங்கிலம் எடுத்த வாந்தியைக் கண்டெடுத்ததால் இலட்சாதிபதியாக மாறியுள்ளார்.

நியோம் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த நராங் பேச்சராஜ் என்ற மீனவரே திமிங்கிலத்தின் வாந்தியிலிருந்து வெளிப்பட்ட 'அம்பர்' எனப்படும் மெழுகு போன்ற பொருளைக் கண்டெடுத்துள்ளார்.

இதனைச் சோதனை செய்து பார்த்த போது அது, அம்பர்கிரீஸ் என்பது உறுதியானது. 30 கிலோகிராம் நிறை கொண்ட அம்பர் தற்போது ஒரு மில்லியன் யூரோ மதிப்புக் கொண்டது என்பது தெரியவந்துள்ளது.

அதிக மதிப்புக் கொண்ட வாசனைத் திரவியம் தயாரிப்பதற்கு அம்பர் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## ஊழியரின் குற்றச்சாட்டால் புதிய சிக்கலில் ஃபேஸ் புக்




"பேஸ்புக் நிறுவனம் லாபத்தை மாத்திரமே கருத்திற் கொண்டு இயங்குவதாகவும், பயனர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறுவதாகவும்" அந்நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான பிரான்சிஸ் ஹாகன் தெரிவித்த தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் அவர் பிரபல ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்தாவது; "நான் பேஸ்புக் மூலம் உலகிற்கு நல்லது செய்ய முடியும் என்று தான் நம்பினேன். ஆனால் பேஸ்புக்கின் நடவடிக்கைகள் அனைத்தும் குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் இருந்ததால் வெளியேறினேன். இந்நிறுவனத்திற்கு லாபம் ஒன்றே குறி. இது மக்களிடையே பிரிவினைவாத உணர்வை ஊக்குவித்து ஜனநாயகத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக உள்ளது" என்றார்.

## ஒரேநாளில் உச்சத்தைத் தொட்ட 'டெலிகிராம்'




பேஸ்புக் மற்றும் வட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக வலைத்தளங்கள் முடங்கிய ஒரே நாளில் டெலிகிராம் செயலியில் புதிதாக 7 கோடிப் பயனாளர்கள் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 4 ஆம் திகதி பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் வலைத்தளங்கள் சுமார் ஆறு மணி நேரம் முடங்கின.

அந்த ஒருநாளில்மாத்திரம் , தொடர்பாடலை ஏற்படுத்தும் செயலியான டெலிகிராமில் புதிதாக 7 கோடிப் பயனாளர்கள் சேர்ந்துள்ளதாக அதன் தலைமைச் செயல் அதிகாரி பாவல் துரோவ் தெரிவித்துள்ளார்.

ஒரே நாளில் மிகப்பெரும் எண்ணிக்கையில் புதிய பயனர்கள் சேர்ந்தாலும் டெலிகிராம் தடையின்றித் தொடர்ந்து செயல்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## பின் தள்ளப்பட்டார் ட்ரம்ப்



பிரபல கோடீஸ்வரர்களில் ஒருவரான அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒவ்வொரு ஆண்டும் வெளியாகி வரும் ஃபோர்ப்ஸ் அமெரிக்காவின் முதன்மையான 400 கோடீஸ்வரர்களின் பட்டியலில் இடம் பிடித்து வந்தார்.

இந்நிலையில் இவ்வாண்டுக்கான குறித்த பட்டியலில் இடம் கிடைக்காமல் கடந்த 25 ஆண்டுகளில் முதல் முறையாக பட்டியலில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்.

ட்ரம்பின் சொத்து மதிப்பு 2.5 பில்லியன் டொலராகவும், ஆனால் அவரின் சொத்து மதிப்பில் 400 மில்லியன் டொலர்கள் குறைவாக இருப்பதால் இம் முறை ஃபோர்ப்ஸ் அமெரிக்காவின் கோடீஸ்வரர்களின் பட்டியலில் டொனால்ட் ட்ரம்பால் இடம்பிடிக்க இயலாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் 2016ஆம் ஆண்டு பதவி ஏற்றதன் பின்னர், குறித்த பட்டியலில் ஒவ்வோர் ஆண்டும் ட்ரம்ப் சரிவைச் சந்தித்து வந்தார். அதன் தொடர்ச்சியாக தற்போது பட்டியலில் இருந்தே வெளியேற்றப்பட்டிருக்கிறார்.

கொரோனாத் தொற்றுப் பரவலினால் அவரது ரியல் எஸ்டேட் பங்குகள் பெருமளவில் சரிந்தன.

இச்சரிவே ட்ரம்ப் பின்தள்ளப்பட்டமைக்கான காரணமாக அமைந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

### தேசங்களுக்கான லீக் தொடர்:

# இத்தாலியை வென்று இறுதிப் போட்டியில் ஸ்பெய்ன்

**இத்தாலியின் 37 போட்டிகள் தோல்வியில்லா உலக சாதனை முடிவுக்கு வந்தது**




ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஸ்பெய்ன் தகுதி பெற்றுள்ளது.

இத்தாலியில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான அரையிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்கு ஸ்பெய்ன் தகுதி பெற்றிருந்தது.

ஸ்பெய்ன் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் பெரன் டொரஸ் பெற்றிருந்தார். சக முன்களவீரரான மிகேல் ஒயர்ஸபல்லிடமிருந்து இரண்டு தடவைகளும் பந்தைப் பெற்றே டொரஸ் காலாலும், தலையால் முட்டியும் கோல்களைப் பெற்றிருந்தார். இத்தாலி சார்பாகப் பெறப்பட்ட கோலை லொரென்ஸோ பெல்லகிரினி பெற்றிருந்தார். பெடெரிக்கோ சியெஸ்காவின் அதிரடி நகர்வின் மூலமே பெல்லகிரினி கோலைப் பெற்றிருந்தார்.

இப்போட்டியின் 30ஆவது நிமிடத்தில் மஞ்சள் அட்டையைப் பெற்றிருந்த இத்தாலியின் அணித்தலைவர் லியனார்டோ பொனுச்சி, 42ஆவது நிமிடத்தில் ஸ்பெய்னின் அணித்தலைவர் சேர்ஜியோ புஷ்கட்ஸை முழங்கையால் தாக்கிய நிலையில், மீண்டும் மஞ்சள் அட்டை காட்டப் பெற்று, சிவப்பு அட்டை காட்டப் பெற்று மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

இதேவேளை, குறித்த போட்டியில் தோற்றதன் மூலம் 37 போட்டிகளில் தொடர்ச்சியாக தோற்றிருக்காத இத்தாலியின் உலக சாதனை முடிவுக்கு வந்திருந்தது.

### ஐ.பி.எல்:

## பெங்களூரை வென்ற ஹைதரபாத்




இந்தியன் பிறீமியர் லீக்கில், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெங்களூர்

ஹைதரபாத்: 141/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேஸன் றோய் 44 (38), கேன் வில்லியம்ஸன் 31 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹர்ஷால் பட்டேல் 3/33 [4], டான் கிறிஸ்டியன் 2/14 [3], யுஸ்வேந்திர சஹால் 1/27 [4], ஷபாஸ் அஹ்மட் 0/21 [4], மொஹமட் சிராஜ் 0/17 [3])

பெங்களூர்: 137/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: தேவ்டுட் படிக்கல் 41 (52), கிளென் மக்ஸ்வெல் 40 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: உம்ரான் மலிக் 1/21 [4], சிதார்த் கோல் 1/24 [4], புவ்னேஷ்வர் குமார் 1/25 [4], ஜேஸன் ஹோல்டர் 1/27 [4])

போட்டியின் நாயகன்: கேன் வில்லியம்ஸன்

இந்நிலையில், அபு தாபியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண் றைசர்ஸை நடப்புச் சம்பியன்கள் மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்வதுடன், டுபாயில் நடைபெறும் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸை டெல்லி கப்பிட்டல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## பரிஸ் ஸா ஜெர்மைனில் சாலா?




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான மொஹமட் சாலாவை அடுத்தாண்டு கைச்சாத்திடுவதில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் ஆர்வமாயுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமது முன்களவீரர் கிலியான் மப்பேயை பிரதியிட வேண்டிய சந்தர்ப்பத்திலேயே சாலாவை பரிஸ் ஸா ஜெர்மைன் கைச்சாத்திடும் எனத் தெரிகிறது.

எவ்வாறெனினும், லிவர்பூலுடன் 2023ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 29 வயதான சாலா, புதிய ஒப்பந்தம் ஒன்று தொடர்பில் பேச்சுக்களில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவின் பெரிய இராணுவ விளையாட்டு குழு இலங்கைக்கு

இந்திய இராணுவம், இலங்கை இராணுவம் ஆகிய இரு தரப்பினர் மத்தியிலும் விளையாட்டு ஆர்வம், இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு "இராணுவ விளையாட்டு பரிமாற்றம்" திட்டத்தின் கீழ் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு வரும் 61 பேர் அடங்கிய இந்திய இராணுவக் குழாம் நட்பு ஹொக்கி, கூடைப்பந்து, கைப்பந்து மற்றும் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

இவ்வாண்டில் தொற்றுநோய் அச்சுறுத்தலால் பின்னடைவுகள் காணப்பட்டாலும் , விளையாட்டு பரிமாற்று நிகழ்வு மற்றும் விளையாட்டு துறைக்கு ஊக்குவிப்பை வழங்க வேண்டும் என்ற பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் எண்ணக்கருவுக்கமைய தேசிய மற்றும் சர்வதேச மற்றும் உள்நாட்டு தரத்தில் அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்கள்/ வீராங்கனைகளின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் போட்டிய நிகழ்வாக மேற்படி நிகழ்வு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த காலங்களில் இந்திய இராணுவத்தினருடன் கரப்பந்து, கபடி, கூடைப்பந்து, ஹொக்கி போன்ற பல நட்பு போட்டிகளில் இலங்கை இராணுவம் பங்கேற்றிருந்தாலும், இரண்டு அதிகாரிகள் மற்றும் 59 விளையாட்டு வீரர்கள் (61) பேர் அடங்கிய பெரும் குழுவாக ஒருபோதும் பங்குபற்றியிருக்கவில்லை. இந்நிகழ்வுகள் தேசிய விளையாட்டுக்குழுவின் தலைவரான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் அறிவுரைக்கமைய இராணுவ விளையாட்டு பணிப்பகத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் நளின் பண்டாரநாயக்காவால் இந்நிகழ்வு ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இரு நாட்டு படைகளினதும் விளையாட்டு வீரர்கள் ஹொக்கி (கொழும்பில் செயற்கை மைதானம்), பனாகொட இராணுவ விளையாட்டு கிராமத்தில் கூடைப்பந்து மற்றும் கரப்பந்து ஆகிய (எதிர்வரும் புதன்கிழமை) போட்டிகளில் பங்குபற்ற உள்ளனர். அதனையடுத்து விருது வழங்கும் நிகழ்வுகளுக்கு முன்பதாக வெள்ளிக்கிழமை (15) தொம்பேகொடை இலங்கை இராணுவ யுத்த உபகரண படையணி தலைமையக கிரிகட் மைதானத்தில் ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் பங்குகொள்ளவுள்ளனர்.

வருகை தரும் இந்திய குழுவினர் இலங்கையிலிருந்து புறப்படும் முன்னதாக காலி, பின்னவல, கண்டி மற்றும் சிகிரியா ஆகிய இடங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 08 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.